Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

SATURDAY, DECEMBER 11, 2021

சனிக்கிழமை டிசெம்பர் 11, 2021 | ஒளி: 07 கதிர் 176 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## பட்ஜெட் பாஸ்

பா.நிரோஸ்

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் அரசாங்கத்தின் 2022ஆம் ஆண்டுக்கான வரவு -செலவு திட்டம் (பட்ஜெட்) 93 மேலதிக வாக்குகளால் பாராளுமன்றத்தில் நேற்று (10) நிறைவேற்றப்பட்டது.

வரவு-செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக 157 வாக்குகளும், எதிராக 64 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

எதிர்க்கட்சியின் பிரதமக் கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல, வரவு-செலவு திட்டத்தின் மூன்றாம் மதிப்பீட்டுக்கு வாக்கெடுப்பை நடத்துமாறு கோரினார். அதனைத் தொடர்ந்து, இலத்திரனியல் முறைப்படி வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

தொடர்ச்சி P2

வடக்கு கரையோரங்களில் கரையொதுங்குவது

# சரணடைந்தவர்களின் சடலங்களா?

பா.நிரோஸ்



**கரையொதுங்கும் உடல்களை பொலிஸார் பார்த்துள்ளனர். அந்தன் பின்னர் அந்த எங்கே? என யாருக்குமே தெரியாது**

வடக்கில் பல்வேறான கடற்கரையோரங்களில் சடலங்கள் கரையொதுங்குகின்றன. இந்த சடலங்கள் தொடர்பில் பாரிய சந்தேகங்கள் எழுந்துள்ளனவென சுட்டிக்காட்டிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். ஸ்ரீதரன், இராணுவத்திடம் சரணடைந்தவர்களா? இவ்வாறு சடலங்களாக கரையொதுங்குகின்றனர் என்றும் கேள்வியெழுப்பினார்.

சரணடைந்தவர்கள், இப்போதுதான் கொலை செய்து கடலில் வீசுகிறார்களா? எனும் சந்தேகமும் எழுந்துள்ளது என்றும் சபையின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

2022 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவு திட்டத்தின் இறுதி நாள் விவாதம் நேற்று (10) நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

“யாழ்ப்பாணம், வெற்றிலைக்கேணியில் கரையொதுங்கிய உடல் எங்கேயென யாருக்கும் தெரியாது. மருதங்கேணி பொலிஸார் அந்த உடலை சென்று பார்த்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## கடன் இல்லாத நாட்டை கையளிப்போம்

பா.நிரோஸ்



எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான அரசாங்கமொன்று அமையுமென எதிர்க்கட்சியினர் கூறுகிறார்கள். அவ்வாறு அமையுமாக இருந்தால் கடன் இல்லாத நாட்டையே நாம் சஜித்துக்கு ஒப்படைப்போம் என நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

2022ஆம் ஆண்டுக்கான வரவு -செலவு திட்டத்தின் இறுதிநாள் விவாதத்தில் கலந்துகொண்டு பதிலளித்து உரையாற்றும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## பாக்கு மரத்தில் ஏறிய சிறுத்தை

எம்.கிருஸ்ணா



ஹட்டன் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட எபோட்சிலி மொண்டிபெயார் தோட்டத்தில் பாக்கு மரத்திலிருந்த சிறுத்தையை பொலிஸாரும் பொதுமக்களும் இணைந்து விரட்டியடித்தனர்.

காட்டுப்ப குதியிலிருந்து மொண்டிபெயார் குடியிருப்புக்குள் நுழைந்த சிறுத்தையை பிரதேசவாசிகள் விரட்டியபோது வீட்டுத்தோட்டத்தில் உள்ள பாக்குமரத்தில் அச்சிறுத்தை ஏறிக்கொண்டது.

தொடர்ச்சி P2

## ஆண் சமபால் உறவினால் 40 சதவீதமானோருக்கு எச்.ஐ.வி

பாறுக் ஷிஹான்



ஆண் சமபாலுறவால், இலங்கையில் 40 சதவீதமானவர்களுக்கு எச்.ஐ.வி தொற்றியிருப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது எனத் தெரிவித்த கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஜி.சுகுணன், பாதுகாப்பற்ற பாலியல் செயற்பாடு, தாய் தந்தையினுடாக பிள்ளைகளுக்கு கடத்தப்படுதல், பாதுகாப்பற்ற ஊசிகள் மற்றும் இரத்தமாதிரிகளின் ஊடாகவும் எச்.ஐ.வி பரவுகின்றன என்றும் கூறினார்.

அம்பாறை மாவட்ட பொறுத்தவரையில், எச்.ஐ.வி. தொற்றாளர்களில் 51 இனங்காணப்பட்டுள்ளனர். கல்முனை பிராந்தியத்தில் நால்வர் உள்ளனர் எனத் தெரிவித்த அவர்,

தொடர்ச்சி P2

## பண்டிகைக்கு முன் பூஸ்டர் தடுப்பூசி

- தடுப்பூசியைப் பெறாது பொது இடங்களுக்குச் செல்லத் தடை
- தொற்றாளர்களில் அதிகமானோர் தடுப்பூசி பெறாதவர்கள்
- 16 19 வயது பிள்ளைகளுக்கு இரண்டாவது டோஸ்
- 12– 15 வயது பிள்ளைகளுக்கு முதலாவது டோஸ்
- வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்கான கட்டுப்பாடுகளில் தளர்வு



எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் கொவிட் தொற்றுப் பரவல் ஏற்படுவதைக் கட்டுப்படுத்துவதற்காக, அடுத்த இரண்டு வாரங்களுக்குள் பூஸ்டர் தடுப்பூசி ஏற்றலை முழுமைப்படுத்துமாறு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ , கொவிட் தொற்றுப் பரவலை கட்டுப்படுத்துவதற்கான விசேட குழு உறுப்பினர்களுக்கு பணிப்புரை விடுத்தார்.

இதேவேளை, பொதுமக்கள் பொது இடங்களுக்கு இனிவரும் நாட்களில் பிரவேசிக்கும் போது கொரோனா தடுப்பூசி அட்டையை வைத்திருப்பதை கட்டாயமாக்குமாறும் ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார் என்றும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## வட மாகாண ஆளுநர் கடும் எச்சரிக்கை



வட மாகாணத்திலுள்ள பொதுமக்கள் சேவை ஸ்தாபனங்களின் தலைமை அதிகாரிகளுக்கு வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா , 09.12.2021 எனும் திகதியிட்டு, குறிப்பாணையொன்றை அனுப்பியுள்ளார்.

தொடர்ச்சி P2

## கன்னி விக்னராஜா இலங்கை விஜயம்



ஐக்கிய நாடுகளின் உதவிச் செயலாளர் (ASG), ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டம் (UNDP) உதவி நிர்வாகி மற்றும் ஆசிய மற்றும் பசிபிக் பிராந்தியத்திற்கான UNDP பிராந்திய பணியகத்தின் பணிப்பாளர் திருமதி. கன்னி விக்னராஜா இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

5 நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு அவர், டிசெம்பர் 13 திங்கட்கிழமை இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார். இலங்கையில் தங்கியிருக்கும் காலத்தில் பல்வேறு தரப்பினருடன் அவர் பேச்சுவார்த்தையிலும் ஈடுபடவுள்ளார்.

## 2022 புத்தாண்டின் முதல் அமர்வு ஜன.11

2022ஆம் ஆண்டுக்கான பாராளுமன்ற அமர்வுகளை எதிர்வரும் ஜனவரி 11ஆம் திகதி ஆரம்பிப்பதற்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று முன்தினம் (09) நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் தீர்மானிக்கப்பட்டது.

ஜனவரி 11, 12 மற்றும் 13ஆம் திகதிகளில் பாராளுமன்றத்தைக் கூட்டுவதற்கு இங்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முதல்நாள் அமர்வில், மஹாபொல உயர் கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் (திருத்தச்) சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



கிண்ணியா விவகாரம்

## தலைவருக்குப் பிணை

மூவருக்கு விளக்கமறியல் நீடிப்பு

கிண்ணியா  குறிஞ்சாக்கேணியில் படகுப்பாலம் கவிழ்ந்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட கிண்ணியா நகரசபை தலைவர் நேற்று (10) பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த கிண்ணியா நகர சபை தலைவர் எஸ். எச்.எம். நளீம், 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

குறிஞ்சாக்கேணி படகு விபத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் அடிப்படையில் கடந்த 24 ஆம் திகதி நால்வர் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்களுக்கு எதிரான வழக்கு, திருகோணமலை நீதிமன்ற நீதவான் பயாஸ் ரசாக் முன்னிலையில் நேற்று (10) வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போதே, கிண்ணியா நகர சபை தலைவர் பிணையில் விடுக்கப்பட்டுள்ளார். ஏனைய மூவரின் விளக்கமறியலும் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

## காலங்களை கடத்தி சாட்சியங்களை அழிக்காதீர்

க. அகரன்

காலங்களைக் கடத்தி சாட்சியங்களை அழிக்காமல் மக்களுக்கு நீதி கிடைக்க வழிசமைக்க வேண்டுமென முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளருமான சிவசக்தி ஆனந்தன் கேட்டுக்கொண்டார்.

காணாமல் போன உறவினர்களால் வவுனியாவில் நேற்று (10) மேற்கொள்ளப்பட்ட தீப்பந்த போராட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## மின்வெட்டு இனி இல்லை

நாட்டின் எந்தவொரு பகுதியிலும் மின் விநியோகம் துண்டிக்கப்பட மாட்டாதென மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

மின் துண்டிப்பை மேற்கொள்வதை நிறுத்துவதற்கான சந்தர்ப்பம் காணப்படுவதாக தெரிவித்த, மின்சக்தி அமைச்சின் ஊடகப்பேச்சாளர் சுலக்ஷன ஜயவர்தன, நேற்று (10) முதல், அமுலானது என்றார். தேவையான மின் விநியோகத்தை முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார், கடந்த சில நாட்களாக மாலை 06 மணி தொடக்கம் இரவு 9.30 வரையான காலப்பகுதியில் ஒரு மணித்தியால மின்வெட்டு அமுல்படுத்தப்பட்டது.

கடந்த வாரம் நாடளாவிய ரீதியில் மின்சார விநியோகத்திற்கு தடை ஏற்பட்ட போது, நுரைச்சோலை நிலக்கரி மின்னுற்பத்தி நிலையத்தின் மின்பிறப்பாக்கிகள் செயலிழந்தமையால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## எனக்கு பைத்தியம் இல்லை என்கிறார் ரணில்



மூழ்கிக் கொண்டிருக்கும் கப்பலில் ஏறிக்கொள்வதற்கு எனக்கு பைத்தியம் பிடிக்கவில்லையெனத் தெரிவித்த முன்னாள் பிரதமரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க, அடுத்த வருடமும் மிகவும் நெருக்கடியான வருடமாக இருக்கும் என்றும் கூறினார்.


பிரதமர் பதவியை, ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்குவதற்கு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன என தகவல்கள் கசிந்திருந்தன. அதில், உண்மை எதுவும் இருக்கின்றதா? என்பது தொடர்பில், பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் ரணிலிடம் கேட்டுள்ளனர். அதற்கு பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவை அரசாங்கத்துக்குள் இணைத்துக்கொண்டால், பொருளாதாரத்தை மீளவும் கட்டியெழுப்ப முடியுமென்பது பலரது கருத்தாக இருக்கிறதென பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# சரணடைந்தவர்களின் சடலங்களா?



இப்போது அந்த உடலை காணவில்லை. கரையொதுங்கிய உடல் எவ்வாறு காணாமற்போகும்? அதனை யார் எங்கே கொண்டு சென்றனர் என்பது தெரியாதுள்ளது" என்றார்.

சரணடைந்தவர்கள், காணாமல்போனவர்களை வைத்திருந்து, கொலை செய்து கடலில் வீசியுள்ளார்களா? அந்த உடல்கள்தான் கரையொதுங்கியுள்ளனவா? என காணாமல் போனவர்களின் உறவுகளினால் சந்தேகங்கள் தெரிவிக்கப்படுகின்றன என்றார்.

மேலும், பாகிஸ்தானுக்கு 3,500 கண்களை இலங்கையில் இருந்து தானம் செய்யப்பட்டதாகக் கூறுகிறார்கள். அந்த கண்கள் யாருடையவை என்பதில் சந்தேகங்கள் உள்ளன. எனவே இது தொடர்பில் அரசாங்கம் உரிய பதிலை வழங்க வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

# பட்ஜெட் பாஸ்



ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹுமான், அரவிந்த குமார் தேசியப்பட்டியல் எம்.பி.யான டயானா கமகே ஐக்கிய மக்கள் சக்தியின் பங்காளிக் கட்சிகளாகவுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் எம்.பி.க்களான ஹரீஸ், பைசல் ஹாசிம், தௌபீக், நசீர் அஹமட், முஸ்லிம் தேசிய கூட்டணியின் புத்தளம் மாவட்ட எம்.பி.யான அலிசப்ரி ரஹீம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் முஷாரப், அத்துரலிய ரத்தன தேரர் ஆகியோர் வழமைப்போல அரசாங்கத்துக்கு ஆதரவாகவே இம்முறையும் வாக்களித்தனர்.

இதேவேளை, எதிர்க்கட்சிகளான சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி, மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணி, சம்பந்தன் தலைமையிலான தமிழ் தேசியக் கூட்டமைப்பு, அனுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஆகியன எதிராக வாக்களித்தன.

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, விக்னேஸ்வரன், ரவூப் ஹக்கீம், ரிஷாட் பதியூதீன் ஆகியோர் வரவு -செலவு திட்டத்தின் மூன்றாம் மதிப்பீடுக்கு எதிராக வாக்களித்தனர்.

ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. குமார வெல்கம் உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் நால்வர் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை.

# 2022 புத்தாண்டின் முதல் அமர்வு ஜன.11

ஜனவரி 12ஆம் திகதி குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம், ஆளணியினருக்கெதிரான கண்ணிவெடிகளைத் தடைசெய்தல் சட்டமூலம், நீதித்துறை (திருத்தச்) சட்டமூலம், குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் போன்றவை இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

இதேவேளை, மறைந்த முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர தொடர்பான அனுதாபப் பிரேரணை மீதான விவாதம் அத்துடன், ஜனவரி 13ஆம் திகதி முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 4.30 மணி வரை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

# ஆண் சமபால் உறவினால் 40 சதவீதமானோருக்கு எச்.ஐ.வி



எச்.ஐ.வி. ஒருவருக்குத் தொற்றுமாயின் அது அவரது நிர்பீடணசக்தியை இல்லாதொழிக்கின்றது என்றார்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் வெள்ளிக்கிழமை(10) மாலை நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையினால் டிசெம்பர் 1ஆம் திகதி உலக எயிட்ஸ் தினமாக அனுஸ்டிக்கப்படுகின்றது. 1981 ஆண்டு முதலாவது எச்.ஐ.வி தொற்றாளர் இனங்காணப்பட்டார். இன்றுவரையிலும் 36 மில்லியன் மக்கள் இந்த தொற்றால் இறந்துள்ளனர். 37 மில்லியன் மக்கள் அத்தொற்றுடன் வாழ்ந்து வருகின்றனர் என்றார்.

இலங்கையை பொறுத்தமட்டில் 2,600 பேர் சிகிச்சையை எச்.ஐ.வி. தொற்றுநோய்க்காக சிகிச்சைப் பெற்றுக்கொண்டிருக்கின்றனர். 1,000 தொற்றாளர்கள் மறைந்து வாழ்கின்றனர் என்றார்.



# வட மாகாண ஆளுநர் கடும் எச்சரிக்கை

அக்குறிப்பாணையில், பொறுப்புக்கூறல், கடமையுணர்வு மற்றும் அர்ப்பணிப்பு தொடர்பிலேயே குறிப்பிடப்பட்டுள்ளது.

மின்னஞ்சல் அனுப்புவது உள்ளிட்ட பல்வேறு வழிமுறைகளில் கோர்ப்புகளை மற்றுமொருவருக்கு அனுப்பி, தமது வேலையை இன்னுமொருவர் செய்யும் வரை அதிகாரிகள் பார்த்துக்கொண்டு இருக்கின்றமை தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளை கவனத்திற்கொண்டு பழிவாங்கல்களை முன்நிறுத்தியும் ஊழல் சிந்தனையுடன் மக்கள் சேவைக்கு தடை ஏற்படுத்துகின்ற செயற்பாடுகள் காணப்படுவதாகவும் நாட்டின் மக்கள் தொடர்பில் கரிசனையின்றி அவர்களை காயப்படுத்துகின்றமை ஏனைய அரச அதிகாரிகளையும் கவலையில் ஆழ்த்துவதாக வட மாகாண ஆளுநரின் குறிப்பாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கணக்காய்வு மற்றும் விடயங்களை மறைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதுடன், பாலியல் கவர்ச்சியும் பணிகளில் செல்வாக்கு செலுத்துவதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்டளைகளையும் வழிகாட்டுதல்களையும் மறந்துவிட்டு கடமையை செய்யாமல் இருப்பதற்கான காரணங்களுக்கு முன்னுரிமையளித்து அரசியல் மயப்படுத்தப்படுகின்றமை அபிவிருத்திக்கும் தடையாக இருப்பதாக வடமாகாண ஆளுநர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேற்சொன்ன காரணங்களால் அழுத்தத்தினை எதிர்நோக்குபவர்கள் உடனடியாக அது தொடர்பில் ஆளுநருக்கு அறிவிக்கும் பட்சத்தில், பாதுகாக்கப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த விவகாரங்களில் ஈடுபடுகின்றவர்கள் அவற்றினை முற்றாக நிறுத்த வேண்டுமென வலியுறுத்தியுள்ள வட மாகாண ஆளுநர், அவ்வாறு நிகழாத பட்சத்தில் நிறுவனத்திலிருந்து வெளியேறுமாறும், இல்லையெனில் அவ்வாறானவர்கள் வெளியேற்றப்படுவார்கள் எனவும் குறிப்பாணையினூடாக எச்சரிக்கை விடுத்துள்ளார்.

வட மாகாணம் அர்ப்பணிப்பு, கரிசனை, திறமையுடன் கூடிய சேவையினை எதிர்பார்ப்பதாகவும் பெருமைவாய்ந்த பொதுமக்கள் சேவை ஊழியராக தூய்மையான மக்கள் பணியில் திகழவேண்டும் எனவும் வட மாகாண ஆளுநர் வலியுறுத்தியுள்ளார்.

நாட்டின் சிறந்த பொதுமக்கள் சேவை இடம்பெறும் மாகாணமாக வட மாகாணத்தை மிளிரவைப்பதற்கு இணையுமாறு ஆளுநர் ஜீவன் தியாகராஜா வட மாகாணத்திலுள்ள பொதுமக்கள் சேவை ஸ்தாபனங்களின் தலைமை அதிகாரிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

# காலங்களை கடத்தி சாட்சியங்களை அழிக்காதீர்

ஆக்கப்பட்டவர்கள், அரசியல் கைதிகள், நில அபகரிப்பு உள்ளிட்ட பல பிரச்சினைகளுக்கு எந்தவொரு தீர்வும் காணமுடியாத நிலைக்குள் தள்ளப்பட்டு இருக்கின்றது. ஆகவே, தமிழ் மக்கள் நீண்டகாலமாக தமக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதற்காக இந்த மனித உரிமை பேரவையில் எதிர்பார்த்திருந்ததது ஏமாற்றமாக இருக்கின்றது.

அதுமட்டுமல்லாமல் தமிழ் மக்களுடைய இந்த பிரச்சினையை வெறுமனமே சிறுபான்மைகுழுக்கள் என்று இந்த மேற்குலக நாடுகள் அதற்கு குறுகிய வட்டத்திற்குள் இதை நோக்குகின்ற நிலமை இருக்கின்றது. அது தொடர்ந்து நீடிக்கப்படாமல் இருக்க வேண்டுமாக இருந்தால் சர்வதேச சமூகம், இந்த போர்

> **காணாமல் ஆக்கப்பட்டவர்கள் உயிரோடு இல்லையாக இருந்தால் பகிரங்கமாக அரசாங்கம் மன்னிப்பைக் கோரவேண்டும். அதற்கு அடுத்தகட்டமாக என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அதற்கான ஒரு நிலமைக்கு செல்வதற்கு சர்வதேச சமூகம் இலங்கை அரசாங்கத்துக்கு முழுமையான அழுத்தத்தை கொடுக்க வேண்டும்**

பாதிப்பால் ஏற்பட்டு இருக்கின்ற அத்தனை பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பதற்காக இலங்கை அரசாங்கத்திற்கு கடுமையான ஓர் அழுத்தத்தை பிரயோகிப்பதற்கான ஒரு காலகட்டம் வந்திருக்கின்றது.

ஆகவே, இந்த காணாமல் ஆக்கபட்டு இருக்கும் உறவுகள் இன்றைக்கு நூற்றுக்கணக்கானவர்கள் தங்களுடைய உறவினர்களை இழந்திருக்கின்றார்கள். இந்நிலையில், காலம் கடத்தி சாட்சியங்களை அழிக்காமல் மக்களுக்கு நீதி கிடைக்க அரசாங்கம் வழிசமைக்க வேண்டும் என்றார்.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் உயிரோடு இல்லையாக இருந்தால் பகிரங்கமாக அரசாங்கம் மன்னிப்பைக் கோரவேண்டும். அதற்கு அடுத்தகட்டமாக என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அதற்கான ஒரு நிலமைக்கு செல்வதற்கு சர்வதேச சமூகம் இலங்கை அரசாங்கத்துக்கு முழுமையான அழுத்தத்தை கொடுக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

# கடன் இல்லாத...

தொடர்ந்து உரையாற்றிய அவர், வெளிநாட்டு அந்நிய செலாவணியிலும் சிக்கல் நிலைமையில் நாம் இருக்கிறோம் என்பதை ஏற்றுக்கொள்கிறோம். இக்கட்டமான நிலையில் இருக்கிறோம். எவ்வாறாயினும் நாம் செலுத்த வேண்டிய ஒவ்வொரு டொலரும் அடுத்த வருடத்தில் செலுத்துவோம். வெளிநாடுகளுக்கு பணியாளர்களாக செல்வோரின் எண்ணிக்கை மூன்று மடங்காகக் குறைவடைந்துள்ளது. எனவே, புதிய புதிய நாடுகளுக்குப் பணியாளர்களை அனுப்புவோம் என்றார்.

மக்களைக் காப்பாற்றுவதற்காக நாட்டை முடக்கினோம். அதனால் எமது வாழ்வியல் பறிப்போனது. சர்வதேச நாணய நிதியத்துடன் தற்போது கலந்துரையாடுவதற்கான தேவை எழவில்லை. எரிபொருளை கொள்வனவு செய்வதற்கே அதிகளவான நிதியை செலவிட வேண்டியுள்ளது. இதனைக் குறைக்கும் பட்சத்தில் கடனுக்காக எவரிடமும் கையேந்தும் நிலைமை வராது என்றார்.

நாட்டின் தற்போதைய நிலைமைகளுக்குக் கொரோனா வைரஸ் மட்டுமல்ல கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் செயற்பாடுகளும் காரணமாகுமெனத் தெரிவித் அவர், கடந்த அரசாங்கமும் இதற்குப் பொறுப்புக்கூற வேண்டும். இதனாலேயே ஐ.தே.கவை விடுத்து ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்றார்.



# பாக்கு மரத்தில் ஏறிய சிறுத்தை

சம்பவம் தொடர்பில் பிரதேச வாசிகள் ஹட்டன் பொலிஸாருக்கு நேற்றுக்காலை 9.30 மணியளவில் அறிவித்தனர். இதனையடுத்து

ஸ்தலத்துக்கு விரைந்த பொலிஸார் பட்டாசுகளை கொளுத்தி சிறுத்தையை விரட்டியத்தனர்.

# எனக்கு பைத்தியம்...



நாட்டில், தற்போது ஏற்பட்டிருக்கும் ஐக்கிய அமெரிக்க டொலர் பற்றாக்குறை, அடுத்தவருடம் ஜனவரி இறுதி வரையிலும் இருக்கும். பொருளாதாரமும் மிகவும் கடினமான நிலையில் நிற்கிறது என்றும் தெரிவித்துள்ள ரணில் விக்கிரமசிங்க, அடுத்த வருடமும் மிகவும் கடினமான வருடமாக இருக்கும் என்றார்.

# பண்டிகைக்கு முன்...



ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று (10) முற்பகல் இடம்பெற்ற கொவிட் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தும் விசேட கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறுத் தெரிவித்தார்.

இரண்டாவது டோஸ் தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டு 03 மாதங்கள் நிறைவடைந்த அனைவரும் பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதற்கு தகுதி பெறுவர். அதன்படி, தடுப்பூசி வழங்கப்படும் எந்தவோர் இடத்திலும் நாளை முதல் (இன்று) தினசரி பூஸ்டர் தடுப்பூசியாக ஃபைசர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

இதுவரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளுக்கேற்ப, இன்றைய நாட்களில் அடையாளம் காணப்படும் கொவிட் நோயாளிகளில் அதிக சதவீதமானவர்கள் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ளாதவர்களாக இருப்பதுடன், அவர்களில் பெரும்பாலானவர்கள் இள வயதுடையவர்கள் என்று சுகாதாரப் பிரிவு அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

கொவிட் தொற்றுக்கு ஆளாகுதல் மற்றும் மரண எண்ணிக்கையைக் குறைத்துக் கொள்வதற்காக தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வது கட்டாயமாகும். இது தொடர்பாக இளம் வயதினருக்கு தெளிவுபடுத்தி, விரைவாகத் தடுப்பூசியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி, பணிப்புரை விடுத்தார்.

கொவிட் தொற்றுப் பரவலைத் தடுப்பதற்கான தடுப்பூசியைப் பெறாதவர்கள், பொது இடங்களுக்குச் செல்வதைத் தடுப்பதற்காக தற்போது சட்ட ஆலோசனை பெறப்பட்டுள்ளது. அதைக் கருத்திற்கொண்டு, எதிர்காலத்தில் பொது இடங்களுக்குச் செல்லும்போது தடுப்பூசி அட்டையைக் கொண்டு செல்வதைக் கட்டாயமாக்க கொவிட் குழு இன்று தீர்மானித்தது.

16- 19 வயதுகளுக்கு இடையிலான பிள்ளைகளுக்கு இரண்டாவது டோஸ் தடுப்பூசியையும் மற்றும் 12-15 வயதுடைய பிள்ளைகள் அனைவருக்கும் முதலாவது தடுப்பூசியை வழங்குவதற்கும் அனுமதிக் கிடைத்துள்ளது. இதன்படி கல்வி அமைச்சுடன் இணைந்துத் திட்டமிட்டு, தடுப்பூசி ஏற்றலை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது. விமான நிறுவனங்கள் விமானப் பயணங்களின் எண்ணிக்கையை அதிகரித்துள்ளன. சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளை மேலும் தளர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.




நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷ, பாராளுமன்றத்தில் நவம்பர் 12 ஆம் திகதியன்று சமர்ப்பித்த, 2022 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தின் மீதான இறுதிநாள் விவாதம் நேற்று (10) நடைபெற்றது. அதில், கலந்துகொண்டு உரையாற்றிவர்களில் சிலரின் உரைகள்...



பா.நிரோஸ்
ddnirosh@gmail.com

# தனி நபரின் படம் நாட்டுக்கு பொருந்தாது



ஒரு குடும்பம் முழு அரசாங்கத்தையும் பங்குப்போட்டுக்கொண்டுள்ளதாக தெரிவித்த எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஏரான் விக்ரமரத்ன, கல்வி, சுகாதார அமைச்சுக்களுக்கான நிதி குறைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்திலேய நாடு கடன் பொறிக்குள் சிக்கியதாக தெரிவித்த அவர், அப்போதிருந்த தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவே அப்போது நிதி அமைச்சராக இருந்தார். ஜனாதிபதியின் தற்போதைய செயலாளரே நிதி அமைச்சின் செயலாளராக இருந்தார் எனவும் தெரிவித்தார்.

நிதி அமைச்சரின் இயலாமையை மறைப்பதற்காக அரச ஊழியர்களின் மீது குற்றம் சுமத்தி வருவதாகவும், பாதுகாப்பு அமைச்சுக்கும், நெடுஞ்சாலை அமைச்சுக்கும் பாரியளவிலான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளபோதிலும், மக்களுக்கு அவசியமான கல்வி, சுகாதார அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் குறைக்கப்பட்டுள்ளன என்றார்.

ஒரு குடும்பம் முழு அரசாங்கத்தையும் பங்குப்போட்டுக்கொண்டுள்ளது. "வன் மேன் சோ" (தனிநபர் படம்) படத்துக்கு நன்றாக இருக்கும். ஆனால், நாட்டுக்கு அது பொருந்தாது என்றார்.

### இந்தியாவிடமிருந்து

# உதவிகளைப் பெற வெட்கம் வேண்டாம்



இந்தியாவிலிருந்து உதவிகளைப் பெறுவதற்கு வெட்கப்படத்தேவையில்லை என தெரிவித்த தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர் இராதாகிருஷ்ணன், நாட்டின் தற்போதைய சூழ்நிலைகள் காரணமாக நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷவுக்கு சிறப்பாகச் செயற்பட முடியாதுள்ளதாகவும் கூறினார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர், இராதாகிருஷ்ணனுக்குப் பேசுவதற்கு நேரம் போதவில்லை எனக்கூறியதோடு, எனக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் நான்கு நிமிடங்கள் எனக்குப் போதாது. மேலும் இரு நிமிடங்களை வழங்க வேண்டும் என்றார்.

எதிர்க்கட்சியில் நேரம் தர முடியாது என்றால் ஆளுங்கட்சியிலாவது தனக்கு நேரத்தை ஒதுக்கித் தர வேண்டுமென அவர், கேட்டுக்கொண்டதை அடுத்து ஆளுங்கட்சியின் பிரதமக் கொறடாவும் அமைச்சருமான ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ, "இராதாகிருஷ்ணன் எங்களது பழைய நண்பர் அவருக்கு நாம் மூன்று நிமிடங்கள் தருகிறோம். எதிர்க்கட்சியில் அதிகமான நேரம் சேறுபூசுபவர்களுக்கு ஒதுக்கப்படுகிறது. இப்படிதான் எம்.பிகளை எதிர்க்கட்சி நடத்துகிறது." என்றார்.

இதனை தொடர்ந்து உரையாற்ற ஆரம்பித்த இராதா, வெளிநாட்டுப் பணியாளர்கள், தேயிலை ஏற்றுமதி, சுற்றுலாத்துறை, ஆடைத்தொழிற்சாலை ஆகியவற்றின் ஊடாக நாட்டுக்கு டொலர்கள் கிடைக்கும். எனவே இவற்றை மேம்படுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

பாகிஸ்தானில் படுகொலை செய்யப்பட்ட பிரியந்தவுக்கு குமாரவுக்கு நடைபெற்றதைபோல எதிர்காலத்தில் வேறெவருக்கும் நடக்கக்கூடாது எனத் தெரிவித்த அவர், இந்தியாவில் இடம்பெற்ற ஹெலிகொப்டர் விபத்தில் உயிரிழந்தவர்களுக்கும் அஞ்சலியையும் செலுத்தினார்.

இந்தியாவிடமிருந்து உதவி பெறுவதற்கு வெட்கப்படக்கூடாது. நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷ சிறப்பாக செயற்படக்கூடியவர். தற்போதைய சூழ்நிலையில் சிறப்பாக செயற்பட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்றார்.

# பெசில், சமலின் அமைச்சுக்கள் இராணுவத் தளபதி வசமாகலாம்



காஸ் அடுப்புகள் வெடித்து வரும் நிலையில், தற்போது உரக் கேன்களும்வெடித்து வருவதாகத் தெரிவித்த எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ, நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷ, இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷ ஆகியோர் அமைச்சுப் பதவிகளை அவர்களிடமிருந்து பறித்து இராணுவத் தளபதிக்கு வழங்கக்கூடும் என்றார்.

தொடர்ந்து உரையாற்றிய சஜித் பிரேமதாஸ, நாட்டு மக்களின் பணத்தை மத்திய வங்கி பலவந்தமாக கொள்ளையடிக்கப் பார்க்கிறது. இதனை உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்த அவர், அந்நிய செலாவணி பிரச்சினைக்கு அரசாங்கம் வழங்கும் தீர்வா இதுவெனவும் கேள்வியெழுப்பினார்.

சிவப்பு லேபள் ஒட்டப்பட்ட சிலிண்டர்களும் இப்போது வெடிக்கின்றன. என்பது பிரதமருக்குத் தெரியுமா? சிலிண்டர்களுக்குள் எல்லாம் சரியாக இருக்கின்றன. அதனால் ஆபத்துகள் இல்லையென அமைச்சர் கூறிய நிலையில், தற்போது அந்த சிலிண்டர்களும் வெடிக்கின்றன என்றார்.

இறக்குமதிச் செய்யப்பட்ட திரவ உரக் கேன்களும். தற்போது வெடிக்கின்றன. அப்படியென்றால் நாட்டில் என்னதான் நடக்கின்றன. எரிவாயு நிறுவனங்களும் இராணுவத் தளபதிக்கு வழங்கப்படலாம் எனவும் கூறினார்.

நிதி அமைச்சருக்கும் அந்நிய செலாவணி பிரச்சினையை தீர்க்க முடியவில்லை என்றால் நிதி அமைச்சரின் அதிகாரங்களும், இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷ வின் அதிகாரங்களும் பறிக்கப்பட்டு இராணுவத் தளபதிக்கு வழங்கக்கூடுமென எதிர்வுகூறினார்.

# நரி ஊளையிடும், நாய்கள் குறைக்கும்

## பொன்சேகாவுக்கு பொறாமை என்கிறார் சரத்



சூரியன் உதிக்கும்போது நரி ஊளையிடும், நாய்கள் குறைக்கும். எனவே பொன்சேகாவின் விமர்சனங்களுக்கு அஞ்சவோ, கவலைப்படவோ போவதில்லையெனத் தெரிவித்த பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர, பொன்சேகாவுக்கு என்மீது பொறாமை என்றார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா என்மீது கீழ்த்தரமான முறையில் அவமதித்து பாராளுமன்றத்தில் உரையாற்றியுள்ளார். என் மீது கொண்டிருக்கும் பயம், பொறாமை காரணமாகவே இவ்வாறு உரையாற்றியுள்ளார். பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் எனக்குக் கிடைத்துள்ளமையே இந்த பொறாமைக்குக் பிரதான காரணமாகும் என்றார்.

சூரியன் உதிக்கும் போதே நரி ஊளையிடும். நாய்கள் குறைக்கும் எனவே பொன்சேகாவின் விமர்சனங்களைக் கண்டு கவலையப்பட வேண்டாமென தேரர் ஒருவர் எனக்கு அறிவுரை கூறியுள்ளார். போதைப்பொருளுக்கு அடிமையான குடுகாரர்கள்போல பொன்சேகா செயற்படுகிறார். பீல்ட் மார்ஷல் பதவிக்குரிய வகையில் அவர் செயற்பட வேண்டும். இவரின் செயற்பாடுகளால் முழு இராணுவம் வெட்கத்துக்குள்ளாகி உள்ளது.

இதேவேளை, பொன்சேகா நேற்று முன்தினம் (09) சபையில் முன்வைத்து குற்றச்சாட்டுக்கள் அனைத்தையும் மறுத்த சரத் வீரசேகர, "பொலிஸ் என்னுடையது என்பதை எப்போது பயமில்லாது கூறுவேன். அச்சமும், சந்தேகமும் இல்லாத சமூகத்தை உருவாக்குவதே எனது இலக்கு. பெண்கள் அச்சமும், சந்தேகமும் இல்லாது எந்நேரத்திலும் பயணிக்கக்கூடிய நாட்டை உருவாக்க வேண்டும். இதற்காக நான் எப்படி வேண்டுமானாலும் செயற்பட தயாராக இருக்கிறேன்."எனவும் கூறினார்.

ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களை அவமதிக்கும் எம்.பி.க்களை பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளில் இருந்து நீக்க சபாநாயகர் நடவடிக்கை எடுக்க வேண்டும். வெள்ளை கொடிகளை ஏந்தி புலிகள் இராணுவத்திடம் சரணடையும்போது அவர்களை இராணுவம் சுட்டுகொன்றதாகக்கூறி நாட்டில் போர்க்குற்றம் இடம்பெற்றிருக்கக்கூடும் என்ற சந்தேகத்தை சர்வதேசத்துக்கு ஏற்படுத்தியவர் பொன்சேகாவே எனவும் கூறினார்.

இதேவேளை, பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா , நேற்று முன்தினமும் (09) அமைச்சர் சரத் வீரசேகர நேற்றும் (10) ஆற்றிய உரைகளில் உள்ள தேவையற்ற விடயங்களை ஹன்சாட்டில் இருந்து நீக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக சபாநாயகர் அறிவித்தார்.

# மாலின் அட்னனை அழைத்து வாருங்கள்

இலங்கை பொறியியலாளரான பிரியந்த குமாரவை அடித்து, தீயிட்டு கொளுத்தி படுகொலை செய்தபோது, தனது உயிரையும் துச்சமென நினைத்து பிரியந்தவுக்காகப் போராடிய பாகிஸ்தான் பிரஜை மாலிக் அட்னன், இலங்கைப் பாராளுமன்றத்துக்கு அழைத்து வரவேண்டுமென ஆளுங்கட்சியான ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தது.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய ஜயந்த கெட்டகொட, பாகிஸ்தானில் வைத்து இலங்கையரான பிரியந்த குமார படுகொலை செய்யப்பட்டிருந்தார். அவரை, கொலைக்காரர்களிடமிருந்து பாதுகாக்க தன்னுயிரையும் துச்சமென மதித்து போராடிய அந்நாட்டு பிரஜையான மாலிக் அட்னனுக்கு, அந்நாட்டு பிரதமர் இம்ரான் கான் உள்ளிட்ட பாகிஸ்தான் அரசாங்கம் கௌரவித்துள்ளது என்பதையும் இதன்போது அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே, மாலிக் அட்னனை, இலங்கைப் பாராளுமன்றத்துக்கு அழைத்து அவரை அரசாங்கம் கௌரவிக்க வேண்டும் எனவும் சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தார்.



# 'பைத்தியத்தை பைத்தியமென கூற ஜனநாயகம் தேவையில்லை



ஜனாதிபதிக்கு பைத்தியமென, ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்ணான்டோ என்று கூறிவில்லையென தெரிவித்த அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார, பைத்தியத்தைப் பைத்தியம் என கூறுவதற்கு ஜனநாயகம் தேவையில்லை என்றார்.

தொடர்ந்து அவர் தனதுரையில், அந்நிய செலாவணி எதிர்வரும் இருவாரங்களுக்கு மாத்திரமே நாட்டில் இருப்பதாகவும், அடுத்த வருடம் மார்ச் மாதத்தில் நாட்டில் உணவுப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு வரும். உண்ணுவதற்கு வுவும் இல்லாமல் போகும் நிலை ஏற்படுமென பலரும் எச்சரிக்கிறார்கள் என்றார்.

சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு -செலவு திட்டத்தில் நாட்டை கட்டியெழுப்புவதற்கு எதுவுமில்லை. நாட்டை கட்டியெழுப்ப நிதி அமைச்சர், பட்ஜெட்டில் எதனை முன்வைத்துள்ளார்? நாடு முகங்கொடுத்திருக்கும் பிரச்சினைகளை இனவாதங்களைக் கொண்டு மூடிமறைக்க அரசாங்கம் முயற்சிக்கிறது என்றார்.

ஹரின் பெர்னாண்டோ எம்.பி ஜனாதிபதியை பைத்தியம் என கூறவில்லை. ஆளுங்கட்சியினரே ஜனாதிபதியை அவ்வாறு கூறுகிறார்கள். பைத்தியத்தை பைத்தியம் என கூறுவதற்கு ஜனநாயகம் தேவையில்லை என்றார்.

### ஈஸ்டர் தாக்குதல்

# இம்ரான் இருந்திருந்தால் நடவடிக்கை எடுத்திருப்பார்



ஈஸ்டர் தாக்குதல் நடைபெற்று மூன்று வருடங்களாகின்ற போதிலும் இன்னும் நீதி கிடைக்கவில்லயெனத் தெரிவித்த எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் நிரோஷன் பெரேரா, பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் போன்ற தலைவர்கள் இலங்கையில் இருந்திருந்தால் உரிய நடவடிக்கைகள் எடுத்திருப்பார்கள் எனவும் தெரிவித்தார்.

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் போன்ற ஒருவர், இலங்கையில் இருந்திருந்தால் ஈஸ்டர் தாக்குதல் நீதியை நிலைநாட்டியிருப்பார்கள். உண்மையில் இதுவொரு வெட்கத்துக்குரிய செயற்பாடு. நாட்டு மக்கள் தொடர்ந்து நீதி வேண்டுமென கேட்டுவருகிறார்கள் என்றார்.

இன்னும் ஒரு சில மாதங்களில் ஈஸ்டர் தாக்குதல் இடம்பெற்று மூன்று வருடங்களாகப் போகிறது. ஈஸ்டர் தாக்குதலுக்கு நீதி கிடைக்கவில்லை என்றால் நாடு வங்குரோத்து அடையும் என்பது மட்டுமல்லாது நாடு நாசமடையும் என்றார்.

### நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு

# இனப் பிரச்சினைக்கு தீர்வை காண வேண்டும்



தேசிய இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வைக் காண்பதே நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையாக அமையுமெனத் தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், நாட்டுக்குக் கடனைப் பெற்றுக்கொள்ள நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷ அல்லல்படுகிறார் எனவும் தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர், தற்போதைய நிதி அமைச்சரின் செயற்பாடுகள் குறைவடைந்துள்ளதாகவும், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள பெண் தலைமைத்துவ குடும்பங்கள் பல்வேறு சிரமங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர் என்றும் எடுத்துரைத்தார்.

பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு உதவ வேண்டும். இதேவேளை, வரவு-செலவு திட்டத்திலுள்ள உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு கடனைப் பெற்றுக்கொள்ள அமைச்சர் பெசில் ராஜபக்ஷ அல்லல்பட்டுத்திரிகின்றார் . இந்த பட்ஜெட் மீதான விவாதம் நடைபெறும் போதே, கடன் கேட்டு இந்தியாவுக்கு செல்ல வேண்டிய நிலையில் பெசில் ராஜபக்ஷ இருக்கின்றார் என்றார்.

முதலாவதாக தேசிய இனப்பிரச்சினைக்கு ஒரு நியாயமான தீர்வைக் காண்பதுதான் பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படியாக இருக்க முடியும். இனப் பிரச்சினைக்கு தீர்வைக் காண்பதிலும் பெசிலின் ஆதிக்கம் நிச்சியமாக இருக்கும் என்றார்.

# 'டீல்' அரசியலுக்காகவே பட்ஜெட்டை ஆதரிக்கின்றனர்

## முஸ்லிம் எம்.பிகள் குறித்து சாணக்கியன் விசனம்



முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்குப் பதிலாக தங்களது சுயலாபத்துக்காக, டீல் அரசியலுக்காகவே வரவு -செலவு திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்து வருகிறார்கள் என கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தால் கைது செய்யப்பட்டவர்களின் விடுவிக்க, காணி அபகரிப்பை தடுக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து பட்ஜெட்டுக்கு ஆதரவளிக்கலாம்.

அதேபோல முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளான ஜனாஸா அடக்கம், ஞானசார தேரர் தொடர்பான பிரச்சினைகள் உள்ளிட்டவற்றை கோரிக்கையாக வைத்து வரவு- செலவு திட்டத்துக்கு ஆதரவளிக்கலாம். ஆனால், இவற்றை செய்யாது தங்களது சுயலாபத்துக்கான டீல் அரசியலுக்காகவே வரவு-செலவு திட்டத்துக்கு ஆதரவாக வாக்களிக்கிறார்கள் எனவும் கூறினார்.

சாணக்கியன் உரையாற்றிக்கொண்டிருக்கும் போது, அரசாங்கத்துக்கு ஆதரவான எம்.பிகளான ஹரீஸ், முஷாரப் ஆகியோர் குறுக்கீடுகளை செய்தனர்.

தங்கத்திலே ஒரு குறையிருந்தாலும் தரத்தினில் குறைவதுண்டோ?

# “மன வலிமையால் ஊனம் தெரிவதில்லை”




எம். கிருஸ்ணா



**உடலளவில் ஊனம் இருந்தாலும் மனதளவில் ஊனம் இல்லாமல் உலகையே தனவசப்படுத்தி சாதித்தவர்கள் எத்தனையோ பேரை அடையாளப்படுத்தலாம். அவர்களே ‘மனிதனின் உண்மையான ஊனம் மனம் தான்’ என நிரூபித்தவர்களாக, நம் மத்தியிலும் பலர் பேசப்படுவர்களாகவே வாழ்க்கின்றனர்; வாழ்ந்து மறைந்துள்ளனர். வரலாற்றிலும் தமக்கென தனியிடத்தை பிடித்துள்ளனர்.**

அந்தவகையில், உடலளவில் பாதிப்பு இருந்தாலும் மனதளவில், குறிப்பாக எல்லோரது மனதிலும் தனக்கென தனியிடத்தைத் தக்க வைத்துக் கொண்டு, வாழ்ந்துக்கொண்டிருப்பவர் தான் குமார் என எல்லோராலும் செல்லமாக அழைக்கப்படும் ஞானகுமார். 30 இளம் வயது இளைஞன்; சக இளைஞர்கள், பெரியவர்களின் உள்ளத்தில் இடம்பிடித்துள்ளார்.

வெற்றிலை, பாக்கு (கூரு) விற்கும் ஒரு சிறு வியாபாரி. ஹட்டன் பஸ் தரிப்பிடத்தில் பல நேரம் அந்த வியாபாரிக்கு அருகில் நின்ற போதிலும் அவர் பற்றித் தெரிந்துகொள்வதில்லை. அவர் இருக்கும் இடம், எந்நேரமும் பரபரப்பாகவும் கலகலப்பாகவும் இருக்கும்.

நானும் கடந்த மூன்று வருடங்களாக அவரைக் கண்டுகொள்ளமலேயே இருந்துவிட்டேன். கடந்தவாரம், திடீரென ‘குமார்’ என்னை அழைத்தார். அவர் அமர்ந்திருக்கும் இடத்துக்குச் சென்ற போதுதான் நான் அதிர்ச்சியடைந்தேன்; மனம் தடுமாறிவிட்டது. அவர் அமர்ந்தே இருப்பதால், அவர் ஊனமானவர் என்று எப்போதும் எண்ணியதில்லை. ஆனால், அருகில் சென்றவுடன் அதிர்ச்சியான அதே மனநிலையில் அவர் பற்றிய விடயங்களைக் கேட்டறிந்தேன். அவர் சொன்ன விடயங்கள் ஆச்சிரியமிக்கதாகவே இருந்தன.

அவருடன் உரையாடிய விடயங்கள் எமது வாசகர்களுக்காக...

## யார் இந்த ஞானகுமார்?

நுவரெலியா மாவட்டம், அம்பகமுவ பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட ஹட்டன் நகரிலிருந்து சுமார் ஏழு கிலோ மீற்றர் தூரத்திலுள்ள எபோட்ஸ்லி தோட்டத்தைச் சேர்ந்த இளைஞனே ஞானகுமார் சின்னசாமி. இவருக்கு இரண்டு சகோதரர்கள்; இருவரும் திருமணம் முடித்து தனியாக வாழ்ந்து வருகிறார்கள் தந்தை ஆறு மாதங்களுக்கு முன்னர் இறந்து விட்டார். தற்போது 73 வயதுடைய தாயுடன் ஞானகுமார் வாழ்ந்து வருகிறார்.

இவர், மஸ்கெலிய மொக்கா தமிழ் வித்தியாலயத்தில் தரம் ஐந்து வரை கல்வி கற்றிருந்தார். குடும்பச் சூழ்நிலை காரணமாகத் தனது 12ஆவது வயதிலேயே தொழிலுக்காகத் தலைநகர் சென்று, அங்கிருந்தபோது ஏற்பட்ட விபரீதமே அவரது தலையெழுத்தையே மாற்றிவிட்டுள்ளது.

## என்ன நடந்தது?

கொழும்புக்குத் தனது 12 வயதில் வேலைக்காகச் சென்றவர், அங்கு கடையொன்றில் நீண்ட காலம் வேலை செய்து, பின்னர் அங்கிருந்து விலகிச் சந்தையொன்றில் வேலை செய்து கொடிருக்கும் போது, கனரக வாகனமொன்று அவருக்கு பின்னால் வந்து மோதியுள்ளது. இச்சம்பவத்தில், அவர் தனது இரண்டு கால்களையும் இழந்துவிட்டார். 2017 ஆம் ஆண்டு இவ்விபத்து சம்பவித்துள்ளது.

அதன் பின்னர் இரண்டாண்டுகள் கொழும்பு ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று, மீண்டும் சொந்த இடத்துக்கத் திரும்பியுள்ளார். இரண்டு கால்களோடு முழு அங்க அவயங்களுடன் சென்ற குமார், தொடைப் பகுதியுடன் வீடு திரும்பியுள்ளார்.

கால்ப்பகுதியை இழந்தாலும் நெஞ்சுறுதி தளராத குமார், வீட்டிலிருந்தே சுயதொழில் சிலவற்றைச் செய்து வந்துள்ளார். தீபாவளி, பொங்கல் போன்ற விசேட தினங்களில், சுவாமி படங்களைப் பிரேம் செய்து விற்பனை செய்து வந்துள்ளார். அதில் போதிய வருமானம் இல்லாது இருந்தமையால், நாளாந்தம் ஹட்டன் நகருக்குள் கொண்டு வந்த விற்பனை செய்து வந்துள்ளார்.

2017ஆம் ஆண்டு ஹட்டன் நகரின் சந்தைப் பகுதியின் வீதியில் குமார் இவ்வாறு விற்பனையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் போது, அவரை அவதானித்த ஹட்டன் தனியார் பஸ் நிலைய பொறுப்பதிகாரி மதிப்பிற்குறிய காமினி, அந்த இளைஞனின் தன்னம்பிகையைத் தட்டிக்கொடுத்து, பஸ் தரிப்பிடத்திலேயே தனது வியாபாரத்தைச் செய்வதற்கு வழிசமைத்துக் கொடுத்துள்ளார். அன்றிலிருந்து சுமார் மூன்று ஆண்டுகளாகத் தனது நாளாந்த வாழ்வாதாரத்துக்கான வருவாயைத் தேடி, தன் தாயோடு வாழ்ந்து கொண்டிருக்கின்றார்.

“மழை நேரங்களில் குடையைப் பிடித்துக்கொண்டுதான் ‘வெற்றிலைக் கூரு’ விற்பனை செய்கின்றேன். தற்காலிக கடையொன்றை அமைத்துத் தருவதாக சமூர்த்தி உத்தியோகஸ்தர் கூறியுள்ளார். ஆனால், ஹட்டன் நகர சபையில் அனுமதிக் கடிதமொன்றைப் பெற்றுத்தருமாறு கூறினார்கள். நான் மூன்று மாதங்களுக்கு முன்னர் ஹட்டன் - டிக்கோயா நகர சபை தலைவரை சந்தித்து அனுமதி கடிதமொன்றை கேட்டேன். நகர சபை கூட்டத்தில் பேசி முடிவெடுத்து பதில் தருவதாகக் கூறியுள்ளார். அதன் பின்னர் என்னால் அவரைச் சென்று சந்திக்கக் கிடைக்கவில்லை”.

## மூன்று சில்லுகளை கொண்ட சைக்கிள்

“அதேபோல தனக்கு மூன்று சில்லுகளைக் கொண்ட என்னைப் போன்றவர்கள் பாவிக்கும் அந்த வண்டி கிடைத்தால், வெளியிடங்களுக்குச் சென்று, வேறு சிறுசிறு வியாபாரங்களையும் செய்ய முடியும். எனக்கு வெளியில் சென்று வருவதற்கு இலகுவாக இருக்கும். கால் இல்லாத பிரச்சினையை நான் 



ஒரு பொருட்டாக நினைத்ததில்லை. எனது மனவலிமையே என்னை வாழவைக்கின்றது” என்கிறார், எல்லோரும் முன்னுதாரணமாகக் கொள்ள வேண்டிய குமார்.

உடலில் எந்த ஊனமும் இல்லாமல் நடமாடும் யாசகர்களாக வலம் வருபவர்கள் பலருக்கு நல்லதொரு முன்னுதாரணமானவர் குமார்.

“எனது உடற் குறையை வைத்து, நான் யாரிடமும் எந்த உதவியும் கேட்ட தில்லை. இந்தச் சக்கர நாற்காலியில் அனுதினமும் ஒரே இடத்தில் உட்காந்திருந்து, ஒரு சுயதொழிலை நான் செய்கின்றேன். ஆனால், எனக்கான மூன்று சில்லு உள்ள எ வண்டி இருக்குமாயின் நானே தனியாக இயங்க முடியும்” எனக் கூறுகிறார் ஞானகுமார்.

உங்களது வீட்டில் இருந்து, எப்படி ஹட்டன் நகருக்கு வருகின்றீர்கள் என கேட்ட போது, “எனது வீட்டில் இருந்து நான் காலை 7 மணிக்கு ஆயத்தமாகிவிடுவேன். காலை வரும் முதலாவது பஸ்ஸிலேயே வந்துவிடுவேன். முகமும் சுழிக்காமல் சக்கர நாட்காலி உதவியுடன் வலம் வரும் என்னை தூக்கி பஸ்ஸில் உள்ள இருக்கையில் அமர்த்தி தினமும் பஸ் நடத்துநர், சாரதி அல்லது சுற்றத்தார் அமரச் செய்வார்கள். எனக்கு, அப்போது மனதுக்கு மிகவும் கஸ்டமாக இருக்கும். யார் செய்த புண்ணியமோ, இவ்வாறு என்னை அரவணைத்து என்னையும் ஒரு குறையானவனாக நினைக்காமல் அவர்களில் ஒருவனாகப் பராமரிப்பதற்கு அவர்களுக்கு நன்றிக் கடன்பட்டிருக்கின்றேன். இந்த உதவிகளுக்கு அவர்களுக்கு நான் எவ்வாறு கைமாறு செய்வேன் என்று கூட புரியவில்லை. அவ்வாறான அன்புள்ளங்களால் தான் எனக்கு குறை இருந்தும் மனதளவில் தைரியமாக வாழக் கூடியதாக இருக்கின்றது.

பஸ் தரிப்பிடத்தில் உள்ள சாரதிகள் நடத்துநர்கள், அங்குள்ள அதிகாரிகள் என சகலருடனும் அன்பாகப் பழகும் இவர், தனக்கெனப் பெரியதொரு நட்பு வட்டாரத்தையே உருவாக்கிக்கொண்டுள்ள ஆழுமை மிக்கவர்.

‘உள்ளம் நன்றாக இருந்தால், ஊனம் ஒரு குறையில்லை’ என்று நிரூபித்து வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த இளைஞன், ஓர் உதாரணபுருஷராவார்.

பாராளுமன்ற சிறப்புரிமைகள் எனும் பெயரில்:

# அவமானங்களையும் பொய்களையும் சமூக மயமாக்குதல்



டொக்டர் வாசன் இரத்தினசிங்கம்
(மத்திய குழு மற்றும் ஊடகக்குழு உறுப்பினர், அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்)

நிறைவேற்றதிகாரம், சட்டவாக்கத்துறை, நீதித்துறை ஆகியவை ஜனநாயகத்தின் மூன்று முக்கிய தூண்கள். இலங்கையின் சட்டவாக்க அமைப்பான பாராளுமன்றம் ஓர் உன்னத அமைப்பாகக் கருதப்பட்டாலும், மேற்கூறிய பாராளுமன்ற உறுப்பினர்கள் மேலாதிக்கத்தைப் பாதுகாக்க எந்த அளவுக்குச் செல்கிறார்கள் என்பது சர்ச்சைக்குரிய விடயமாகும்.

முழு நாட்டையும் ஆட்சி செய்வதற்கான சட்டங்களை இயற்றுவதற்கு பாராளுமன்றமே பொறுப்பு என்ற போதிலும், பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பான விதிகள், ஒழுங்குமுறைகள், நெறிமுறைகள் குறித்து பொதுமக்கள் கேள்விகளை வினவ ஆரம்பித்துள்ளனர்.

சட்டங்களை உருவாக்கும் அமைப்பு சட்டத்தை மதிக்கும் அமைப்பாக இருக்க வேண்டும் என்பதே எந்தவொரு நாட்டினதும் குடிமகனின் முக்கிய எதிர்பார்ப்பாகும். சட்டங்களை இயற்றும் பொறுப்புடைய அமைப்பே, சட்டத்தை மதிக்கவில்லை எனப் பொதுமக்கள் கருதினால், அவர்கள் அந்தச் சட்டங்களுக்குக் கீழ்ப்படியாமல் போக நேரலாம்.

சட்டரீதியாக ஒரு நாட்டை ஆட்சி செய்யும் போது, பாராளுமன்றம் போன்ற உயரிய அமைப்பின் சட்டத்தை மதிக்கும் தன்மையும் மக்கள் பிரதிநிதிகளின் சட்டத்தை மதிக்கும் தன்மையுமே அந்தச் சட்டங்களை முக்கியத்துவப்படுத்துகின்றன. எனவே, பாராளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் மக்கள் பிரதிநிதிகளிடமிருந்து சட்டத்தை மதிக்கும் தன்மை மற்றும் ஒழுக்க நெறிகளைப் பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர்.

அப்போதுதான் ‘உச்ச பாராளுமன்றம்’ என்ற வார்த்தை, தனது உண்மையான மதிப்பைப் பிரதிபலிக்கும். மேலும், மக்கள் பிரதிநிதிகளின் ஒழுக்கமே, ஒரு நாட்டின் ஒழுக்கத்துக்கு அடித்தளமாக அமையும்.

அதேவேளை, பாராளுமன்றத்துக்குள் பாராளுமன்ற உறுப்பினர்கள் வெளியிடும் கருத்துகளுக்கு எதிராக, நீதிமன்ற நடவடிக்கை எடுப்பதற்கு முறையான நடைமுறைகள் இல்லை. பாராளுமன்ற உறுப்பினர்கள் உண்மையான விடயங்களை மாத்திரமே விவாதிப்பார்கள் என்பதோடு, அதனை ஒழுக்கமாகவும் நெறிமுறையுடனும் சட்டரீதியாகச் செயற்படுத்துவர் என்ற முன்முடிவின் கீழ் இந்த வரப்பிரசாதம் வழங்கப்படுகிறது.

எனவே, அந்த நம்பிக்கையை உறுதி செய்வது மக்கள் பிரதிநிதிகளின் தலையாய பொறுப்பாகும். பொதுவாக, இலங்கை பாராளுமன்றத்துக்குள் ஒழுக்கமானது கௌரவ சபாநாயகரால் அல்லது பிரதி சபாநாயகரால் அல்லது சூழ்நிலை அடிப்படையில் சபைக்கு தலைமை தாங்கும் உறுப்பினர் ஒருவரால் உறுதிப்படுத்தப்படுகிறது.

இத்தகைய சூழ்நிலைகளில், சண்டையிடும் நிகழ்வுகள் ஏற்படுகின்றமை மிகவும் அரிதானவை அல்ல. மேலும், பெயர் கூறி அழைத்தல், புத்தகங்கள், தண்ணீர் போத்தல்கள், மிளகாய்த் தூள் என்பவற்றை வீசுதல் போன்றவற்றால் உடல் உபாதைகளை ஏற்படுத்துவது என்பன பாராளுமன்றத்துக்குள் வாடிக்கையாகிவிட்டன.

இத்தகைய சூழ்நிலைகள் தோன்றுவது, குடிமக்களுக்கான சட்டமியற்றும் பணிகளுக்குப் பொறுப்பான பாராளுமன்றம் குறித்த, பொது மக்களின் அதிருப்தியையும் அந்த அமைப்பின் மேலாதிக்கத்தின் மீது எழும் சந்தேகங்களையும் தவிர்க்க விடமாட்டாது. இந்தச் சந்தர்ப்பத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒழுக்கத்துடனும் நெறிமுறை தவறாமலும் பேசுவதுடன், தமது சிறப்புரிமைகளைத் துஷ்பிரயோகம் செய்து, பொய்யான விடயங்களை சமூகமயப்படுத்துவதையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும். இது, மக்கள் பிரதிநிதிகள் மீதான நம்பிக்கையை உறுதி செய்வதன் மூலம், பாராளுமன்றத்தின் மேலாதிக்கத்தை நிலைநாட்டி, நாட்டின் ஜனநாயகத்தையும் ஒழுக்கத்தையும் மேம்படுத்தும்.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள், பாராளுமன்ற சிறப்புரிமை கொண்ட குழுவைச் சேர்ந்தவர்கள் அல்ல. அப்படியிருந்தும், சங்கத்தின் தலைவர், அதிகாரிகள் மற்றும் சங்கம் தொடர்பில் பல பொய்யான விடயங்கள் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படுவதை நாம் அவதானித்துள்ளோம்.

இவ்வாறான போலியானதும் தீங்கிழைக்கும் கருத்துகள் தொடர்பில் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர மற்றும் சிலருக்கு எதிராக முறைப்பாடு செய்துள்ளோம். இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம், எமது சங்கம் தொடர்பான முறைப்பாடுகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பில் மாத்திரமின்றி, பாராளுமன்ற உறுப்பினர்களால் பாராளுமன்ற சிறப்புரிமைகள் இல்லாத பெரும்பான்மையான மக்களுக்கு எதிராகப் பாராளுமன்ற சிறப்புரிமைகள் பயன்படுத்தப்படுவதை ஒழுங்குபடுத்தவும் பாராளுமன்றத்தின் மேலாதிக்கத்தை உறுதிப்படுத்தவும் எதிர்பார்க்கிறோம். இருப்பினும் இன்று வரை மேற்கூறிய முறைப்பாடுகள் குறித்த முன்னேற்றத்தைக் காண முடியவில்லை.

ஜனநாயகத்தை மதிக்கும் மக்களுக்கு இது ஒரு துரதிர்ஷ்டமான நிலையாகும்.

சில நாள்களுக்கு முன்னர், மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர் விஜித ஹேரத், சுகாதார தொழிற்றுறையினரது மருத்துவ நிர்வாக நியமனங்கள் 


டொக்டர் செனால் பெர்னாண்டோ
செயலாளர், அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

நிறுத்தப்பட்டமைக்கு காரணம், அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் மற்றும் அதன் உறுப்பினர்கள் சிலரே எனவும், மேலும் சில போலி குற்றச்சாட்டுகளையும் பாராளுமன்றத்தில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு எதிராக முன்வைத்தார்.

அதேசமயம், அந்தக் குற்றச்சாட்டுகளுக்கு எதிராக எழுந்த சக பாராளுமன்ற உறுப்பினரான வைத்தியர் உபுல் கலப்பத்தியை அவர் பெயரிட்டு அழைத்ததை அவதானிக்க முடிந்தது. மேற்கூறப்பட்ட மருத்துவ நிர்வாக அதிகாரிகளின் நியமனத்தை நிலைப்படுத்த முடியாமைக்கான காரணம், சுகாதார சேவைகள் குறிப்பில், மருத்துவ நிர்வாக பணியாளர் பதவிக்கான தகுதி உள்ளிட்ட விடயங்களை உரிய பங்குதாரர்களின் இணக்கம் இன்றி முன்னாள் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தன்னிச்சையாகத் திருத்தம் செய்தமையே ஆகும்.

அந்த மாற்றங்கள் அனைத்து மருத்துவர்களுக்கும் முன்னர் கிடைத்த வாய்ப்பை இழக்கச் செய்ததாலும், கலந்துரையாடல்கள் அல்லது சமரசம் இன்றி திருத்தங்கள் செய்யப்பட்டதாலும் மருத்துவ தொழிற்றுறை சார்ந்தவர்களிடையே அமைதியின்மையை ஏற்படுத்தியது.

எனவே, தற்போதைய அரசாங்கம் பதவிக்கு வந்ததன் பின்னர், முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவால் மருத்துவ சேவைக் குறிப்பில் மேற்கொள்ளப்பட்ட தன்னிச்சையான மாற்றங்களைத் தற்காலிகமாக இடைநிறுத்தி, கலந்துரையாடல் மற்றும் இணக்கப்பாடுகளுடன் அந்தச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தக் குழுவொன்றை நியமிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

ஆனால், தற்போதைய சுகாதார அமைச்சர் அறியமுடியாத காரணங்களால் காட்டும் தயக்கமே, மருத்துவ நிர்வாகப் பதவிகளுக்கு அதிகாரிகளை நியமிப்பதில் தற்போது ஏற்பட்டுள்ள தாமதத்துக்கு அடிப்படைக் காரணமாகும். இந்தச் சூழலில், பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத், முன்னாள் சுகாதார அமைச்சரின் தன்னிச்சையான செயற்பாடுகளையும் தற்போதைய சுகாதார அமைச்சரின் குறைபாடுகளையும் மறைத்து, அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மீது குற்றம் சுமத்துவது, அவரது அரசியல் கட்சியுடன் சேர்ந்த மருத்துவ சங்கங்களை திருப்திப்படுத்தும் முயற்சியாகவே சுகாதாரத்துறை சார்ந்த பலரால் பார்க்கப்படுகிறது.

இவை அனைத்தும் பாராளுமன்ற சிறப்புரிமைகளுக்குப் பின்னால் ஒளிந்துகொண்டு, தனது அரசியல் வாழ்க்கையை மேம்படுத்துவதற்காகப் பொய்யான விடயங்களை சமூக மயமாக்கும் முயற்சிகளாகவே பார்க்க வேண்டும். மேலும், ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத், மேற்கூறிய செயலை எதிர்த்த மருத்துவர் மற்றும் சக நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரைப் பெயர் குறிப்பிட்டமையானது அவர்களால் பேசப்படும் ‘ஒழுக்கம்’ என்பது இனிப் பொருந்தாது என்பதை நிரூபித்துள்ளது. அந்தச் சீரழிந்த அரசியலுக்குள் தாமும் இன்னொருவர் என்பதை நாட்டுக்கு அவர் காட்டியுள்ளார். இது நாட்டின் ஜனநாயகத்தைப் போற்றும் மக்களின் எதிர்பார்ப்பை அழித்துள்ளது.

இது தொடர்பான கடிதத்தை, ஜே.வி.பியின் அரசியல் பணியகம் மற்றும் மத்தியக் குழுவுக்குச் சமர்ப்பிக்க அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எதிர்பார்க்கிறது. அத்துடன், பாராளுமன்றத்துக்குள் நடந்துகொள்ளும் விதம், பாராளுமன்ற சிறப்புரிமைகள் இல்லாத மக்களை அவதூறு செய்தல், மேற்சொல்லப்பட்ட சிறப்புரிமைகளுக்குப் பின்னால் ஒளிந்துகொண்டு பொய்களைச் சமூக மயமாக்கும் முயற்சிகள் குறித்து சபாநாயகர் அவதானம் செலுத்த வேண்டும் எனக் கோரவும் எதிர்பார்த்துள்ளோம்.

பாராளுமன்றத்தின் மேலாதிக்கம் மீதும், பாராளுமன்ற உறுப்பினர்களின் மீதும் வைத்துள்ள நம்பிக்கையை இழந்த ஒரு நாட்டின் குடிமக்கள், ஜனநாயகத்தின் மீது எந்த அளவுக்கு நம்பிக்கை வைப்பார்கள் என்பது சந்தேகமே. எனவே, பாராளுமன்றத்தின் மேலாதிக்கத்தை உறுதிசெய்து, மக்கள் பிரதிநிதிகளைச் சரியான பாதையில் செலுத்துவதன் மூலம், ஜனநாயகத்தை வலுப்படுத்துவது அனைத்து மக்களினதும் உரிமை மற்றும் பொறுப்பாகும். எத்தகைய இடையூறுகளுக்கு முகங்கொடுக்க நேர்ந்தாலும், இந்த விடயத்துக்காகப் போராடுவோம்.

# கோடி தரும் கோடியில் பாதை இல்லாத பயணங்கள்



சுப்பிரமணியம் பாஸ்கரன்









கிளிநொச்சி மாவட்டத்தின் ஆனையிறவு, சுண்டிக்குளம் ஆகிய சிறுகடல் பகுதிகளை மட்டுமே, தமது வாழ்வாதாரமாகக் கொண்ட தட்டுவன்கொட்டி, நாகேந்திரபுரம், கண்ணகிநகர், புளியம்பொக்கணை, பிரமந்தனாறு, இயக்கச்சி, ஊரியன் உள்ளிட்ட கிராமங்களைச் சேர்ந்த சிறுகடல் தொழிலாளர்கள் காலம்காலமாகத் தமது தொழில் நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

ஆழ்கடல் இல்லாத சுமார் 21 கிலோ மீற்றர் நீளம் கொண்ட சிறுகடலை நம்பி, ஏழு வரையான கடற்தொழிலாளர்கள் கூட்டுறவு சங்கங்களைச் சேர்ந்த 2,000 மேற்பட்ட கடற்தொழிலாளர்கள் தமது பருவ காலத் தொழில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்தக் கடற்பகுதியில், பருவகாலத்தில் இறால், நண்டு, சிறுகடல் மீன்கள் என்பன உற்பத்தியாகின்றன.

“ஆறையிறவு சிறுகடல் பகுதியே எங்களின் வாழ்வாதாரம்; இதில் மூன்று மாதம் தொழில் செய்து கிடைக்கும் வருமானத்தையே, வருடம் முழுவதும் வைத்து வாழ்கின்றோம்” எனக் குறித்த பிரதேச சிறுகடல் தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

அதாவது, வருடாந்தம் பருவ காலத்தில் (நவம்பர்-டிசெம்பர்) குறித்த சிறுகடல் பகுதியையும் ஆழ்கடலையும் இணைக்கும் வகையில், தொடுவாய் வெட்டி விடப்பட்டு, கடல்நீரும் நன்னீரும் கலப்பதுடன், இயற்கையாகவே தொடுவாய் கட்டுப்பட்டு (ஜனவரி - பொங்கலுக்குப் பின்னர்), குறித்த கடற்பகுதியில் இயற்கையாகவே இறால்கள் உற்பத்தியாகின்றன.

தொடுவாய் வெட்டப்பட்டு, ஒரு மாதம் அல்லது ஒன்றரை மாதம் கடந்து தொழிலுக்கான அனுதிகள் வழங்கப்பட்டு, தொழிலாளர்கள் தமது தொழில்களை முன்னெடுப்பார்கள். இத்தொழிலைக் குறிப்பிட்ட காலத்துக்கு மாத்திரமே மேற்கொள்ளமுடியும்.

அதன் பின்னர், கடல் நீர் வற்று ஏற்பட்டு விடும். இவ்வாறு குறிப்பிட்ட காலம் தொழில் செய்து, அதன் மூலமான வருமானத்தைக் கொண்டே, வருடம் முழுவதும் வாழ்வதாக இந்தத் தொழிலாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

இந்தக் கடற்தொழிலாளர்களில் பலர், ஏனைய காலங்களில் விவசாய நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். இவ்வாறு, சிறுகடற் தொழிலாளர்கள், நாகேந்திரபுரத்தில் இருந்து கள்ளியடிக்குத் தொழிலுக்காகச் செல்லும் சுமார் மூன்று கிலோ மீற்றர் தூரமான பாதை, எந்த விதத்திலும் பயணம் செய்ய முடியாத நிலையில் காணப்படுகின்றது.

வருடம் தோறும் கடற்தொழிலாளர்களே இணைந்து, சிரமதானம் மூலம், பாதையைச் சீர்செய்து பயன்படுத்தி வருவதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தக் கடற்பகுதியில் தமது தொழில்களை மேம்படுத்தவும், பல்வேறு அத்தியாவசியத் தேவைகளையும் நிறைவேற்ற வேண்டியுள்ளதாகவும் இந்தப் பிரதேச கடற்தொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அதாவது, நாகேந்திரபுரம் பகுதியில் இருந்து கள்ளியடி வரையான கடற்கரைக்கு செல்லும் வீதி, சேதமடைந்துள்ளது. இதனைப் புனரமைத்து தரவேண்டும் .

அதன்போது, கரையில் இருந்து தொழில் செய்யும் சிறுகடலுக்கு செல்லும் தூரம் சுமார் ஒரு கிலோ மீற்றர் வரையான தூரமாகவும் சதுப்பு நிலமாகவும் காணப்படுவதால், கடற்தொழில் உபகரணங்களையும் கடலுணவுகளையும் கொண்டு செல்லமுடியாத நிலை காணப்படுகின்றது.

இதனால் கடலில் இருந்து துறைமுகம் வரைக்குமான பகுதியை ஆழப்படுத்தி, படகுகள் கரையேறக்கூடிய வகையில் ஏற்படுத்தி தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில், ஏற்கெனவே பலதடவைகள் தமது கோரிக்கைகளை முன்வைத்துள்ளதாகத் தெரிவித்துள்ளதுடன் கடந்த 1970ஆம் ஆண்டிலிருந்து இந்த நிலையே காணப்படுகின்றது என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன், இந்தச் சுண்டிக்குளம் கரையோரத்தை பொறுத்த வரையில், ஏனைய மாவட்டங்களில் முன்னெடுப்பது போன்ற பண்ணைத் திட்டங்களை மேற்கொண்டு, அதன் மூலம் கூடுதல் வருமானததை பெற்றுக்கொள்ளவும் பலருக்கு தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்த முடியும் என்றும் பிரதேச கடற்தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அதாவது, நண்டு வளர்ப்பு, இறால் வளர்ப்பு போன்ற தொழில்களை முன்னெடுக்க முடியும் என்றும் குறிப்பிட்டுள்ளனர். குறிப்பாக, விலை உயர்ந்த செம்பாறை ண்டு இயற்கையாகவே உற்பத்தியாகினாலும் அது குறிப்பிட்ட காலத்தில் கடலிருந்து வெளியேறி அழிவடைகின்றன.

இங்கு ஒரு பண்ணைத்திட்டம் உருவாக்கப்படுமாக இருந்தால், இதனைககூட வைத்து வருமான மீட்ட முடியும் என்றும் எதிர்காலத்தில் இப்பகுதியில் நவீன முறையிலான அதிக வருமானத்தை ஈட்டக்கூடிய தொழில்முறைகளை உருவாக்கித் தருமாறு கடற்தொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய வகையில் அதிக வருமானத்தை பெற்றுக்கொள்ள கூடியதாகவும் அமைந்துள்ள சுண்டிக்குளம் பறவைகள் சரணாலயம் என்பவற்றை, அண்டிய பகுதியாக இது காணப்படுவதால் அதிக மக்கள் தொழில் வாய்ப்பையும் வருமானத்தையும் பெற்றுக்கொள்ளமுடியும் என்றும் இப்பகுதி கடற்தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.



புடவைக்கட்டில்

# சாண் கேட்டு முழம் அகழும் சோகம்



அ. அச்சுதன்







திருகோணமலை மாவட்டத்தின் கரையோர பிரதேச செயலாளர் பிரிவுகளாக உள்ள ஏழு பிரதேச செயலாளர் பிரிவுகளில் குச்சவெளியும் ஒன்றாகும். குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவு, திருகோணமலை மாவட்டத்தின் வடக்குப் புறமாக அமைந்துள்ளது. இதன் தெற்குப் பகுதியாக பட்டணமும் சூழலும் பிரிவும் கிழக்கி கடல் பிரதேசமும் மேற்குப் புறமாக பதிவிசிரிபுரமும் வடக்குப் பக்கமாக கொக்கிளாய் கழிமுகம் என்பன அமைந்துள்ளன. இதன் நீளம் 47 கி.மீ உம் பரப்பளவு 340. 5 சதுர கி.மீ ஆகும்.

பெரிய குளத்திலிருந்து தென்னை மரவாடி வரைக்கும் 24 கிராம சேவகர் பிரிவுகளையும் 91 கிராமங்களையும் கொண்டது. கொழும்பிலிருந்து யு 6 பிரதான வீதியூடாகவும் மட்டக்களப்பிலிருந்து ஏ 15 வீதியுடாகவும் குச்சவெளி பிரதேசத்தை அடையமுடியும்.

குச்சவெளிப் பிரதேசத்தின் தரைத்தோற்றம் பெரும்பாலும் சமதரையாகவும் புல்மோட்டையில் திடலாகவும் ஒரு மீற்றர் தொடக்கம் மூன்று மீற்றர் வரை உயர்ந்தும் காணப்படுகிறது. மொத்தமாக, கடல் மட்டத்திலிருந்து அதி கூடுதலாக 10 மீற்றர் வரை உள்ளது. பெரும்பாலும் சமதரையும் தாழ் நிலமும் அதிகமாக உள்ளதால், களப்புகளும் ஈரநிலங்களும் காணப்படுகின்றன. மழைக்காலத்தில் தாழ்நிலங்கள் வெள்ளப்பெருக்குக்கு உள்ளாகின்றன.

இங்கு கழிமுகங்களாக கொக்கிளாய், கல்லராவ, புடவைக்கட்டு, பெரிய கரச்சி, சின்னக்கரச்சி என்பனவும் களப்புகளாக ஜின்னாபுரமும் காணப்படுகின்றன. கரையோரப் பகுதி கடலாலும் வயல்களாலும் சூழப்பட்டுள்ளது.

இப்பிரதேசம், முக்கிய மணல் சார்ந்த மண்ணும் சிவப்பு இருவாட்டி மண்ணாலும் செம்மண்ணாலும் சிறிதளவு சேதன மற்றைய கழிவுகளாலும் நிரம்பிக் காணப்படுகின்றது.

குச்சவெளி பிரதேச கடற்கரையானது 47 கிலோ மீற்றர் நீளமானதும் ( கழிமுகங்கள், களப்புகள் நீங்கலாக) பெரிய குளம் கிராம சேவகர் பிரிவிலிருந்து புல்மோட்டை தெற்கு கிராம சேவகர் பிரிவு வரை நீண்டு செல்கிறது. இதில் ஒரு சிறிய குடா’, முன்பு ‘பைரேற் குடா’ என்றும் தற்பொழுது உள்ளூர் மக்களால் ‘சாமி மலை’ என்றும் அழைக்கப்படும் குடா, ( இது புடவைக்கட்டு கழிமுகத்திற்கும் கொடுவாக்கட்டு முனைக்கும் இடையில்) பிரிப்பதால், வளைந்தும் மற்றைய இடங்களில் நேராகவும் காணப்படுகின்றது. இக்கடற்கரை நிலையான பகுதியாக உள்ளது. இம்மணல் சிலிக்காவை பிரதானமாகக் கொண்டது.

கொக்கிளாய், கல்லராவ வரையும் கற்பாறைகள் இறந்த முருகைக் கற்பாறைகள் என்பவற்றால் கடற்கரை பகுதி பாதுகாக்கப்படுகிறது. மேலும், இடைக்கிடையே உள்ள பாறைகள் தலைமுகங்கள் என்பவற்றால் இக்கடற்கரை பாதுகாக்கப்படுகிறது. மேலும், பாறைகளும் தலைமுகங்களும் பின்வரும் இடங்களில் காணப்படுகின்றன.

இறக்கக்கண்டி முகத்துவாரம், பெரிய கரச்சிக்கு தெற்குப் பக்கமாக உள்ள பாறை, சலப்பை ஆற்றுப்பிரதேசம், கரடி மலை, வீரன் சோலை, கொடுவாக் கட்டுமுனை, புடவைக்கட்டு கழிமுகம், நடுமலை என்பனவாகும். இவை கரையின் உறுதித்தன்மையைப் பலப்படுத்துகின்றன.

குச்சவெளி கரையோரப் பிரதேசத்தில் ஐந்து கழிமுகங்கள் உள்ளன. அதில் புடவைக்கட்டு கழிமுகம் மிக முக்கியமானது. கொடிக்கட்டு ஆறு, குசவன் ஆறு என்பன இரண்டும் சங்கமித்து, புடவைக்கட்டு கழிமுகம் உருவாகி உள்ளது. இதன் பரப்பளவு 145 ஹெக்டேயர் ஆகும்.

புடவைக்கட்டுப் பாலம் 2008இல் அமைக்கப்படும் வரையும் இங்கு போக்குவரத்துப் பாதை ஒன்று சேவையில் இருந்தது. பருவப் பெயர்ச்சி மழைக்காலத்தில் இதில் மண்ணரிப்பு அதிகமாக உள்ளதாக மக்கள் குறிப்பிடுகின்றனர்.

புடவைக்கட்டு கிராமம், 1950ஆம்ஆண்டு முன்னோர்களால் குடியேறி உருவாக்கப்பட்ட72 வருட வரலாற்றைக் கொண்ட ஒரு பழைமை வாய்ந்த கிராமமாகும். இங்கு தற்போது முஸ்லிம்கள், இந்துக்கள், சிங்களவர்கள் என 450க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்றன. இங்குள்ளவர்கள் மீன்பிடித்தொழிலையே தங்களது வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளனர். இக்கிராமம், கடந்த கால யுத்தம், சுனாமி என்பவற்றால் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருந்தது.

புல்மோட்டை கனிய மணல் தொழிற்சாலைக்கும் திரியாய் குச்சவெளி கிராமத்துக்கும் மிக அண்மையில் செந்தூர் கிராம சேவகர் பிரிவில் அமையப் பெற்றுள்ள இக்கிராமத்தின் கடற்கரையோரங்களில், இல்மனைட் படிவுகள் இருப்பதாகக் கூறி, அவற்றை அகழ்வு செய்ய அனுமதி தருமாறு கனிய மணல் கூட்டுத்தாபன உயரதிகாரிகள் இங்குள்ள பொது அமைப்புகளோடு 2012ஆம் ஆண்டு பேச்சுவார்த்தை செய்து, உடன்படிக்கையையும் மேற்கொண்டு கனியமண் அகழ்வை மேற்கொண்டனர். ஆனால் அவர்கள் செய்து கொண்ட உடன்படிக்கைகளில் குறிப்பிட்ட ஒன்றையும் இதுவரை நிறைவேற்றவில்லை என குச்சவெளி பிரதேச சபை உறுப்பினர் றிஸாத் தெரிவித்தார்.

அதன்பின், தனியார் காணிகளில் கூட மண் அகழத்தொடங்கினர். அப்போது இங்கு மூன்று அடி வரை மண் அகழ்வதாகக் கூறிக்கொண்டு, 20 அடி வரை அகழ்ந்து உரிய முறைகளில்கூட மீள்நிரப்பவில்லை. இதனால் தற்போது இவ்விடங்கள் வழமையான இடங்களை விடத் தாழ்நிலப் பகுதிகளாகவே காணப்படுகிறன.

கடற்கரையிலிருந்து 100 மீற்றருக்கு உட்பட்ட சில தனியார் காணிகளில் இவ்வாறாக மண் அகழ்வை மேற்கொண்டு வருவதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

ஏற்கெனவே அகழ்வை மேற்கொண்ட ஆழமான பகுதிகளை, உரிய முறையில் மண்போட்டு மீள் நிரப்பப்படாததால் தற்போது இவ்விடங்கள் தாழ்நிலப் பகுதிகளாக மாறிவருகின்றன. இங்கு மழைக் காலத்தில் தோண்டியெடுக்கப்பட்ட ஆழமான குழிகளில் நீர் நிரம்பி காணப்படுகின்றது. எதிர்காலத்தில் சில அனர்த்தங்கள் நிகழ்வதற்கும் இது ஏதுவாகி விடும். தொடர்ந்தும் மண் அகழ்வு நடைபெற்றால் இந்தக் கிராமம் முற்றாக அழிந்துவிடும்.

எனவே, இந்த மண் அகழ்வைத் தடுக்க, சமூக செயற்பாட்டாளர்கள் அணைவரும் முன்வர வேண்டும்; குடியிருப்பைப் பாதிக்கும் மேற்படி மண் அகழ்வைத் தடுத்து நிறுத்துமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

எனவே, இக்கிராமத்தையும் இயற்கை வளங்களையும் பாதுகாக்க வேண்டியது அவசியம். இவ் விடயத்தில் அரச உயர் அதிகாரிகள் கண் திறங்க வேண்டும்.



றிஸாத், குச்சவெளி பிரதேச சபை உறுப்பினர்



# அதிரடியான அறிவிப்புகளால் கலைந்துபோகின்ற கனவுகள்

ஒவ்வொருவரும் ஒவ்வோர் எதிர்பார்ப்புகளுடன் ஜீவியம் நடத்திக்கொண்டிருக்கின்றனர். ஒவ்வொரு வருடங்களிலும் ஏதோவொன்றை அடைந்துவிடவேண்டுமென திட்டமிடுவர். அவற்றையெல்லாம், வருடாந்த சம்பள அதிகரிப்பும், ஊக்க ஊதியம் (போனஸ்) ஆகியவற்றை கணக்கில் வைத்து திட்டங்களைத் தீட்டுவர்.

கொரோனா வைரஸ் தொற்றுக்குப் பின்னர், அவ்வாறான எந்தவொரு திட்டத்தையும் தீட்ட முடியாதுள்ளது. நாளொன்றுக்கான தேவையும் செலவுகளும் பன்மடங்குகளால் அதிகரித்துள்ளன. கிடைக்கும் ஊதியத்தை எப்படி கட்டுப்பாட்டுடன் செலவழிக்க முடியும் என்பதிலேயே ஆகக் கூடுதலான கவனத்தை செலுத்துகின்றனர்.

அரசாங்கத் துறைகளாக இருந்தாலென்ன, தனியார் துறைகளாக இருந்தாலென்ன, சம்பள அதிகரிப்பு மற்றும் ஊக்க ஊதியம் எப்போது கிடைத்தது என்பதே பலருக்கும் ஞாபகத்தில் இல்லை. இன்னும் சில துறைகளில் கடமையாற்றுவோருக்கு இவ்விரண்டு வரப்பிரசாதங்களும் ஓரளவுக்கேனும் கிட்டியுள்ளன.

தங்க ஆபரணங்கள், காணியைக் கொள்வனவு செய்தல், வீடு, வியாபார நிலையங்களை நிர்மாணித்தல், இன்றேல் செப்பனிடுதல், பூச்சு (பெயின்ட்) பூசுதல் என்பனவெல்லாம் பலருக்கும் எட்டாக்கனியாகவே இருக்கின்றன. இதற்கிடையில், வாகனம் கொள்வனவு செய்யும் எண்ணத்தை மனங்களில் விதைத்திருந்தவர்கள் மீது பேரிடியாய் மற்றுமோர் அறிவிப்பு வெளியாகியுள்ளது.

வாகனங்களைப் புதிதாக இறக்குமதி செய்வதற்கு அடுத்த வருடமும் அனுமதியளிக்கப்படாது என்ற அறிவிப்பு வாகனக் கொள்வனவின் கனவில் மண்ணை வாரியிறைத்தாற் போலுள்ளது.

நிதி அமைச்சரின் அறிவிப்பில், அரச நிறுவனங்களின் பணியாட் தொகுதிக்காக புதிதாக யாரும் அடுத்தவருடமும் இணைத்துக்கொள்ளப்படமாட்டார்கள் என்ற அறிவிப்பானது. கடந்த இரண்டரை வருடங்களுக்கு மேல் அரசாங்க தொழிலுக்காக காத்திருந்தவர்களின் கனவை கலைத்துவிட்டது.

ஓய்வுபெறும் வயதெல்லை அதிரிக்கப்பட்டுள்ள நிலையில், புதிய நியமனங்களை ஒருவருடத்துக்கு ஒத்திவைத்திருப்பதன் ஊடாக, அரச தொழிற்றுறையில் இன்னும் மூன்று வருடங்களுக்குப் பின்னோக்கி செல்லவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமையொன்று ஏற்படுமென்பதில் ஐயமில்லை.

சில அரச நிறுவனங்களில் தேவைக்கு அதிகமான பணியாளர்கள் இருக்கின்றனர் என்பது உண்மையாகும். அதேபோல, சில தனியார் நிறுவனங்களில் இரண்டொருவரின் வேலைகளை, ஒருசிலரை வைத்து முடிக்கும் செயற்றிறன்களையும் பலரும் கொண்டிருக்கின்றனர். அமர்வதற்கு நாற்காலிகள் கூட இல்லையென நிதியமைச்சர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அப்படியாயின், அரச நிறுவனங்களில் பணியாற்றுவோர் தொடர்பிலான புள்ளிவிவரங்களைத் திரட்டி, மேலதிக பணியாளர்களுக்கு மாற்று ஏற்பாடுகளைச் செய்துகொடுக்கவேண்டும். இல்லையேல், சும்மா இருந்து சம்பளம் பெறுவோரின் எண்ணிக்கையில் மாற்றமே ஏற்படாது.

பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்காக சில கட்டுப்பாடுகளை விதிகவேண்டும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. எனினும், வேலைவாய்ப்புக்காக காத்திருப்போருக்கும் சந்தர்ப்பத்தை பெற்றுக்கொடுக்கும் வகையில் தீர்மானங்களை எடுக்கவேண்டியதே காலத்தின் தேவையாகும். இல்லையேல் கனவுகள் எல்லாம் ஒரு குறிப்பிட்ட வயதுக்குள் கலைந்துவிடும்.

## தமிழ் Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

எல்லாமே அறிந்தவர்கள் எவருமில்லை. எங்கள் தேகத்தில் உயிர் நிலைபற்றி முழுமையாகவும் அதன் தாற்பரியங்களையும் அறியும் ஆற்றல் எப்படியானது என நாம் அறியோம்.

ஆன்மிகத்தால் சொல்லப்படுது, எமது சிற்றறிவுக்குத் தெரிவதில்லை. உயிர் என்ன கண்ணுக்கா தெரிகின்றது? உடலுறுப்புகள், கலங்கள், நரம்பு மண்டலங்கள் என்பன, எத்தனை கோடி எனத் தெரிவதும் தெளிவதும் சிரமமானதாகும்; எமக்கு அப்பாற்பட்டதாகவும் உள்ளது.

இந்த இலட்சணத்தில், மனிதன் தனக்கு எல்லாமே தெரியும் என்கின்றான். மூளையைச் செயற்கையாகச் செய்ய விளைந்தால், பல உயரமான மாடிகள் உள்ள பெரிய பெட்டிகள் கூட அடங்காது எனச் சொல்வதுண்டு. இதுபற்றிய ஆய்வுகள் இன்னும் தொடர்ந்து செய்யப்படுகின்றன. தேடல்கள் செய்யப்பட வேண்டியவையே!

அறிவு, ஞானம் என்பன எப்படி உருவாகின்றன? மனிதன் பற்றிப் பேசுகின்றோம். சிற்றறிவு ஜீவன் குறித்து நமக்கு என்ன தெரியும்? அவைகள் உணர்வு; சக்தி எவ்வண்ணம் இயங்குகின்றது? புதிருக்குள் பல உண்மைகள் புதைந்திருக்கின்றன என்பது மட்டுமே உண்மை.

ஆனால், மருத்துவ விஞ்ஞானம், பௌதீகம், இரசாயனம் எனப் பல பிரிவுகளின் ஆய்வுகள், முடிவுகள் பெறாமலே இயங்குகின்றன. எமக்கு எதற்கு ஆணவம்?

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### முத்தையன்கட்டு பலநோக்கு
## கூட்டுறவுச் சங்கத்தை இயங்க வைக்கவும்

முல்லைத்தீவு, முத்தையன்கட்டு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தை மீள இயக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. 1972ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இச்சங்கம், 2009ஆம் ஆண்டு வரை சிறப்பாக இயங்கியது. மக்கள் இடம்பெயர்ந்து 2010ஆம் ஆண்டில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பின்னர், சங்கம் இயங்கத் தொடங்கியது. 2014ஆம் ஆண்டு இச்சங்கம் மூடப்பட்டது. இதுவரை சங்கம் திறக்கப்படவில்லை.

இதன் காரணமாக, முத்தையன்கட்டு, கனகரட்ணபுரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 500 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இச்சங்கத்தை இயங்க வைப்பதற்கு, கூட்டுறவுடன் தொடர்புடைய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இக்கிராம பொது அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

இச்சங்கம் இயங்குவதன் மூலம், கூட்டுறவுத்துறை வளர்ச்சி பெறும். விவசாயத்தை நம்பியுள்ள மக்கள், கூட்டுறவுச் சங்கம் ஒன்றின் மூலம் பயன் பெறக் கூடிய வாய்ப்புகள் ஏராளமாக உள்ளன. போக்ர் காலத்தில் சிறப்பாக இயங்கிய சங்கம், தற்போது இயங்க முடியாமல் இருப்பது முத்தையன்கட்டு மக்களை பாதித்துள்ளது.

நடராசா கிருஸ்ணகுமார்



### சிவானந்தா தேசிய பாடசாலைப் போராட்டங்கள்:

# கற்றுத்தரும் அரசியல் பாடம்

லக்ஸ்மன்

நிர்வாகமும் அதிகாரமும் ஆதிக்கம் செலுத்தமுடியாத, செலுத்தக்கூடாத துறைகள் சில இன்னமும் இருக்கத்தான் செய்கின்றன. அதில் ஒன்றுதான் கல்வி. அவ்வாறு நடைபெறுமாக இருந்தால் கல்வித்துறை சிறப்பதனதொரு நிலையை எட்டுவது சந்தேகமே. அரசியலாக்கப்படும் கல்வித்துறை கவலைக்கிடமானதொரு எதிர்காலத்தினையே தோற்றுவிக்கும்.

பாடசாலை ஆரம்பித்து 2 வாரங்களேயான நிலையில் மட்டக்களப்பில் ஆரம்பித்த ஓர் ஆர்ப்பாட்டம் கல்வி அமைச்சின் புலனாய்வு அதிகாரிகள், மட்டக்களப்பு வரவேண்டிய நிலையை ஏற்படுத்தியது. இதனை வெறுமனே சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியாதுள்ளது. மட்டக்களப்பு கல்லடி சிவானந்தா தேசிய பாடசாலையில் கடமையாற்றும் ஆசிரியர் ஒருவரை இடமாற்ற வேண்டும் என்ற கோரிக்கையோடு பாடசாலை அபிவிருத்திக் குழுவின் ஏற்பாட்டில் கடந்த 06ஆம் திகதி ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது. இதன் போது குறித்த ஆசிரியர் மீது 41 குற்றச்சாட்டுகள் இருப்பதாக தெரிவித்திருந்தனர். அவ்வாறானால் அந்த ஆசிரியருக்கு இவ்வளவு குற்றச்சாட்டுக்கள் அடுக்கப்படும் வரை என்ன நடந்தது என்ற கேள்வி இந்த இடத்தில் தோன்றுகிறது.

அது அவ்வாறிருக்க, அந்த ஆர்ப்பாட்டத்தின் போது மாணவர்களையோ ஆசிரியர்களையோ பாடசாலையின் உள்ளே நுழைய விடாது தடுக்கப்பட்டது. அவ்வேளையில் ஆசிரியை ஒருவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது. அந்தத் தாக்குதலையடுத்து அன்றைய தினம் பிற்பகலில் ஆசிரியர்களுடைய ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது,

அத்துடன் பிரச்சினை முடிந்தது என்று இருக்க முடியாதபடி பாடசாலைக்குள் மாணவர்களை நுழையவிடாது, ஆசிரியை மீது தாக்குதல் நடத்தியவர்கள் சட்ட நடவடிக்கைக்குட்படுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் வைக்கப்பட்டன. இதன் தொடர்ச்சியாக நேற்றைய தினம் 10ஆம் திகதி பிற்பகலில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றுள்ளது.

மட்டக்களப்பில் மாத்திரமல்ல உலகளவிலேயே சிவானந்தா தேசிய பாடசாலை குறித்து சிறந்ததொரு நற்பெயரும் நன்மதிப்பும் உள்ளது. இந்த நிலையில் ஒரு ஆசிரியரை இடமாற்றக் கோரி பாடசாலை அபிவிருத்திக் குழுவினர் ஆர்ப்பாட்டத்தினை நடத்தும் அளவுக்கு என்ன பிரச்சினை இருந்தது என்று இந்த இடத்தில்தான் ஆராய வேண்டியிருக்கிறது.

குறிப்பிட்ட ஆசிரியர் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுபவராகவும், ஆசிரியர்கள் சார்ந்த பிரச்சினைகளில் முகம் கொடுப்பவராகவும் இருப்பதனால் இவர் ஒரு வேண்டாத நபராகவே நிர்வாக நிலைகளில் இருந்து வருகிறார். இது ஒரு பிரச்சினை,

அந்தப்பிரச்சினையை பெரிதாக்கி இது தூபமமிடப்பட்டிருக்கலாம் என்றே சந்தேகங்கள் வெளியிடப்படுகின்றன. இருந்தாலும், ஓர் ஆசிரியரை இடமாற்றுவதாக இருந்தால் அதற்கான நடைமுறைகள், ஒழுங்குகள் காணப்படுகின்றன. அவ்வாறான நடைமுறைகளைப் பின்பற்றாது ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளுமளவிற்கு பாரதூரமான பிரச்சினைகள் நடைபெற்றிருக்கவில்லை என்பதே பொதுவான கருத்தாக இருக்கிறது.

இந்த ஆர்ப்பாட்டங்கள் ஆசிரியர்கள், மற்றும் மாணவர்களது நலன் சார்ந்த பிரச்சினைகளையே உருவாக்கியிருக்கின்றன. சிவானந்தா தேசிய பாடசாலை ஆசிரியர்கள் பாடசாலைக்கு முன்பாக கவன ஈர்ப்பு போராட்டத்தின் போது ஆசிரியர்கள் அச்சுறுத்தப்பட்டதுடன் அவமதிக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ள ஆசரியர்கள், பாடசாலையின் அபிவிருத்திக்குழுவின் செயலாளர் தனது தனிப்பட்ட நலனுக்காக ஒரு சிலரை இணைத்துக்கொண்டு இந்த ஆர்ப்பாட்டத்தினை நடத்தியுள்ளதாக குற்றஞ்சாட்டுகின்றனர்.

தனிப்பட்ட நலன்களுக்காக பாடசாலையினை குழப்புதல், கல்விசார் ஆளணியினரின் பாதுகாப்பிற்குக் குந்தகம் விளைவித்தல், அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடுதல் போன்றவை சட்டரீதியாகத் தவறானதாகும்.

ஆசிரியர்கள் என்பவர்கள் அழுத்தங்களோ நெருக்கடிகளோ இன்றி பணியாற்ற வேண்டியவர்கள். அவர்களை நெருக்கடிகளுக்குள் தள்ளி எதிர்கால சந்ததியினரான மாணவ சமூகத்தினை வீணடிக்க முடியாது.

இந்த நிலையில், மாணவர்களின் கல்வியைப் பாதிப்புக்குள்ளாக்கும் செயற்பாடுகளை பாடசாலை அபிவிருத்திக் குழுவினர், கல்வி நிர்வாகத் தரப்பினர், அரசியல் சார்புடையவர்கள் மேற்கொள்வதானது பொருத்தமாக இருக்காது என்பதே கல்வித்துறை சார்ந்தவர்களின் கருத்தாக இருக்கிறது.

ஆனால், ஆசிரியர் சமூகத்தை அரசியல் அதிகாரம் கொண்டு அடக்க முனைவதான போக்கு காணப்படுவதானது நல்லதொரு சமிக்ஞையல்ல என்றே சொல்லாம். குறிப்பாக, ஒரு சிலருடைய கட்சி அரசியல் பின்புலங்கள் முழுக் கல்விச் சமூகத்தையும் பாதிக்கின்ற நிலைமையை உருவாக்கிவிடும்.

அந்த வகையில்தான் ஆசிரியர்களின் நேற்றைய போராட்டமானது, ஆசிரியர்களை அதிகார அரசியலைக்கொண்டு அடக்க முற்படுவது தடுக்கப்பட வேண்டும். சிவானந்தா தேசியப்பாடசாலை ஆசிரியை தாக்கப்பட்டமைக்கு சுதந்திர விசாரணை, சட்ட நடவடிக்கை கோரி நடத்தப்பட்டுள்ளது. இவை நிறைவேற்றப்படுமா என்பது பொறுத்திருக்க வேண்டியவையே.

எந்தவொரு பிரச்சினையையும் சுமுகமாக பேச்சுவார்த்தைகள், கலந்துரையாடல்கள் மூலம் தீர்த்துக் கொள்ள முடியும். இருந்தாலும் அதற்காக முயல்வதற்கு யாரும் தயாராவதில்லை. ஒரு சிறிய பிரச்சினையை ஊதித் தூண்டி பெரிதாக்கிக்கொண்டே அப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாத நிலையினை ஏற்படுத்திவிடுவதே பலருடைய வழக்கமாகும். இலங்கையிலுள்ள இனப்பிரச்சினையும் அவ்வாறான அணுகுமுறையினால் தொடர்வதாகும் என்பது நல்லதோர் உதாரணமாகும்.

ஒரு பிரச்சினையை முடிவுக்குவர முடியாததாக மாற்றி இழுத்தடிப்பது அரசியலும் அதிகாரமுமாக இருந்து விடுகிறது. சில வழிநடத்தல்களின் அறிவு, அனுபவங்களும் இதில் தவறாக தாக்கம் செலுத்துகின்றன என்றும் சொல்லலாம். இது வீணடிப்புகளையே ஏற்படுத்துகின்றன.

சர்வதேச மனித உரிமைகள், மனிதாபிமான சட்ட அடிப்படைகள், இலங்கையின் அரசியலமைப்பும், நடைமுறைகள் எனப் பல இருந்தாலும் அவற்றினைக் கடைப்பிடிப்பதற்கு பலர் விரும்பாமைக்கு தவறுகளும், தவறான சிந்தனைகளுமே காரணமாகும்.

கல்விச் சமூகம் என்பது எதிர்கால சந்ததியினருக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டியதாகும். மாணவர்களுக்கு பெற்றோர்கள் முன்மாதிரியானவர்களாக இருப்பது முக்கியமாகும். மட்டக்களப்பு சிவானந்தா தேசியப்பாடசாலையின் ஆசிரியருடைய இடமாற்றம் குறித்து உருவான ஆர்ப்பாட்டம் சிறியதாக இருந்து தேசியளவான பிரச்சினையாக மாற்றம் பெற்றதற்குப் பல காரணங்கள் சொல்லப்பட்டாலும், ஒரு சிலருடைய காழ்ப்புணர்ச்சிகளும் தனிப்பட்ட சில எண்ணப்பாடுகளுமே இதற்குக் காரணம் என வெளிப்படையாகத் தெரிகிறது.

இவ்வாறானவர்கள் தங்களுடைய விமர்சிப்புகளையும் வீண் வாதங்களையும், பிடிவாதங்களையும் களைந்து இப்பாடசாலை மாணவர்களினது எதிர்காலத்தில் மாத்திரமல்ல மாவட்டத்தின், மாகாணத்தின் மாணவ சமூகத்தினதும் எதிர்காலம் குறித்து கரிசனை கொள்ள வேண்டும். இன்றைய காலத்தில் கற்பிக்கப்படுவதும், அனுபவிக்கப்பண்ணப்படுவதும் எதிர்கால சந்ததிக்குக் கடத்தப்படுவதாக அமைந்து விடக்கூடாது. என்னிடம் அதிகாரம் இருக்கிறது என்பதற்காக நான் சமூகத்திற்குப் பாதிக்கும் வகையில் நடந்து கொள்வதானது எதிர்காலத்தினைப் பாதித்துவிடக்கூடாது.

இவ்விடயமானது ஒரு முன்மாதிரியான செயற்பாடாக இனிவரும் காலங்களில் பார்க்கப்படக்கூடாது என்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும். நடைபெற்ற சம்பவங்கள் மறக்கப்படுபவையாக இருப்பது சிறப்பே. ஆனால் அதற்கான சந்தர்ப்பத்தினை எவ்வாறு உருவாக்குவது என்பதுதான் இந்த இடத்தில் நெருடல்.

பெற்றோர் தங்களது பிள்ளைகளின் எதிர்காலம் குறித்து சிந்திப்பவர்கள். அவர்கள் தங்கள் பிள்ளைகளின் கல்வியில் அக்கறை கொள்வது சரியானதே. ஆனால் வீதிக்கு இறங்குவதும், ஆசிரியர்களது உரிமைகளை மதிக்காது நடந்து கொள்வதும், ஏனைய மாணவர்களது கல்விக்கும் உரிமைக்கும் பாதிப்பினை ஏற்படுத்துவதும் பொருத்தமல்ல. இந்த நியாயத்தின்படி சிந்திக்கும் போது பல உண்மைகள் புலப்படும்.

யாரும் யாரையும் தூண்டிவிட முடியும் என்றால் அதனை எல்லோரும் நிகழ்த்திவிட முடியும். சற்றே நிதானமாக சிந்தித்துச் செயற்படும் சந்தர்ப்பத்தில் அது நல்ல முடிவையே தரும் என்பதற்கு சிவானந்தா தேசிய பாடசாலையின் கடந்த வார ஆர்ப்பாட்டம் நல்லதோர் உதாரணமாகும். இதன் அனுபவங்கள் எதிர்காலத்திலேனும் நிர்வாகமும் அதிகாரமும் ஆதிக்கம் செலுத்தாத வகையிலான இதயசுத்தியுடனான நிலைப்பாட்டினை கல்வித் துறையில் கொண்டுவர வேண்டும்.

மூத்த தலைமுறையினரோடு

# தலைமுழுகும் சலவைத் தொழில்

புரணிதா புனிதராசா
ஊடகக் கற்கைகள் துறை,
நான்காம் வருடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.













ஆடையில் உள்ள அழுக்கை நீக்கி அவ்வாடைக்கு வெண்மையும் புதுமையும் தூய்மையும் வழங்குபவர்களே சலவையாளர்கள். அச்சலவையாளர்களினுடைய தொழிலுக்குப் பின்னுள்ள வாழ்க்கையை நம்மில் பலர் அறிந்திருக்கமாட்டோம். அந்தவகையில், அம்பாறை மாவட்டத்தின் பெரிய நீலாவணை பிரதேசத்தில் பரம்பரையாக சலவைத் தொழிலை மேற்கொள்ளும் மூத்த தலைமுறை சலவைத் தொழிலாளியினுடனான சந்திப்பின் போது, இன்றைய காலகட்டத்தில் சலவைத் தொழிலானது எவ்வாறு உள்ளது என்றும் அத்தொழிலுக்கு பின்னுள்ள அவர்களது வாழ்க்கை முறையையும் இன்றைய காலத்தில் சலவைத் தொழிலானது அருகிச் செல்கின்றமைக்கான காரணங்களையும் எம்மோடு பகிர்ந்து கொண்டார்.

### கேள்வி: உங்களைப் பற்றிய சிறு அறிமுகத்தை கூறுங்கள்.

பதில்: நான் இங்குள்ள சலவை தொழிலாளிகளில் மூத்தவன் ஆவேன். எனக்கு 69 வயதாகிறது எனது அப்பாவிடம் இருந்து இந்தத் தொழிலை பழகினேன். நாங்கள் பரம்பரை பரம்பரையாக எங்களுடைய குடும்பத்தில் உள்ள அனைவருமே இத்தொழிலை செய்து வருகின்றோம். இவ்வூரில் இடம்பெறும் மங்கல காரியங்களுக்கும் அமங்கல காரியங்களுக்கும் சம்பிரதாயபூர்வமாக எங்களுக்கு உரிய கடமைகளை மேற்கொள்வதற்கு உரிய மூத்த தலைமுறையினராக நான் மட்டுமே உள்ளேன்.

### கேள்வி: நீங்கள் இத்தொழிலை செய்யும் முறை பற்றி கூற முடியுமா?

பதில்: எங்களுடைய தொழிலானது அதிகாலையில் ஆரம்பித்து மாலை நேரம் வரை நீண்டு கொண்டே செல்லும். பெரும்பாலான வேளைகளில் உணவு அருந்துவதற்கு கூட நேரம் இருக்காது. துணிகளை வீடு வீடாகச் சென்று எடுத்து வருவதில் இருந்து ஆரம்பித்து, துணிகளை அழகாகத் தூய்மையாக இஸ்திரி போட்டு, உரிய வீடுகளில் ஒப்படைக்கும் வரையில் நீண்டசெய்முறை இடம்பெறும். இதை நான் மட்டும் தனியாகச் செய்ய முடியாது; எனது மனைவி, பிள்ளைகள், பேரப் பிள்ளைகள் என அனைவருடைய உதவியுடனேயே இத் தொழிலைச் செய்கிறேன்.

### கேள்வி: உங்களுடைய தொழிலில் நீங்கள் எதிர்கொள்கின்ற சவால்கள் எவை?

பதில்: இன்றுள்ள அதிகளவு விலைவாசியில் ஆடைகளைத் தூய்மையாக்க கூடிய சோடாத்தூள், சன்லைட், சவர்க்காரம், சவ்வரிசி, கறல் மருந்து, றின்சோ, குளோரீன், வெளிச்சீன்தூள், நீலம் போன்ற பொருட்களை வாங்குவதற்கே தனியாகப் பணம் தேவைப்படுகின்றது. அத்தோடு, இத்தொழிலை செய்வதன் மூலம் பெரும்பாலான வருமானம் கிடைப்பதில்லை. கிடைக்கும் பணத்தில் அன்றைக்கு அன்றாடச் செலவுகளைப் பார்த்துக் கொள்ள முடிவதோடு, ஆடைகளைத் தூய்மையாக்குவற்குரிய பொருட்களை வாங்குவதற்குமே அளவாக இருக்கும்.

அதுமட்டுமின்றி உணவு அருந்தக் கூட நேரமில்லாமல் ஆடைகளைக் கழுவி, உரியவாறு அதற்குரிய வேலைகளைச் செய்து, இஸ்திரிபோட்டு எடுத்தாலும் ஓர் ஆடைக்குக் கூலியாக வெறும் 60 ரூபாயே கிடைக்கின்றது.

சிலவேளைகளில் அதிக ஆடைகளை வழங்குவதால் 50 ரூபாய்க்கு பேரம் பேசுகின்ற நிலைமையும் காணப்படுகின்றது. அத்தோடு, தற்காலத்தில் சலவை இயந்திரங்களின் வருகையால், பெரும்பாலானவர்களின் உடைகள் எங்களிடம் வழங்குவதில்லை; அவர்களே கழுவிக் கொள்கின்றனர். மேலும், இஸ்திரி போடும் கடைகள் அதிகம் உள்ளதால், சலவை இயந்திரங்களில் கழுவிய ஆடைகளை, அக்கடைகளுக்கே கொண்டு செல்கின்றனர். .எங்களைப்போல் வீட்டில் தொழில் செய்பவர்களிடம் தருவது மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது.

### கேள்வி: நீண்ட நேரம் வேலை செய்வதால் உடல்சார்ந்த ஏதாவது பிரச்சினைகளை எதிர் கொள்கிறீர்களா?

பதில்: ஆம்! அதிக நேரம் தண்ணீருக்குள் நின்று கொண்டே வேலை செய்வதால், உள்ளங்கால் வெடிப்பு, சேற்றுப் புண், சொறி, சிரங்கு போன்ற நோய்களுக்கு ஆளாகுகின்ற நிலைமை ஏற்படுகின்றது. அத்தோடு, அதிக நேரம் நின்று கொண்டே வேலை செய்வதால், குறிப்பிட்ட வயதிற்கு முன்னரே மூட்டுவலிக்கு உள்ளாகின்ற நிலையும் உருவாகின்றது.

### கேள்வி: உங்களுடைய தொழிலைப் பற்றிய சமூகப் பார்வை எவ்வாறு உள்ளது என நினைக்கிறீர்கள்?

பதில்: ஆரம்பத்தில் நாங்கள் இத்தொழிலை செய்வதால் எங்களை சமூகத்தில் ஓரளவு தள்ளி வைத்துப் பார்த்தனர். ஆனால், இன்றைய காலத்தில் பெரும்பாலானவர்கள் எங்களிடம் இயல்பாகப் பழகுகின்ற நிலைமை காணப்படுகின்றது. ஆனாலும், ஒருசிலர் இன்றும் எங்களைத் தள்ளி வைத்துப் பார்க்கும் ஏற்றத் தாழ்வு மனப்பான்மை காணப்படுகின்றது.

### கேள்வி: இன்றைய காலகட்டத்தில் சலவைத் தொழிலானது அருகிச் செல்கின்றமைக்கான காரணங்களை குறிப்பிட முடியுமா?

பதில்: ஆம்! இன்றைய காலகட்டத்தில் இந்தத் தொழிலைச் செய்வதால், நாங்கள் எதிர்பார்த்த அளவு வருமானம் கிடைப்பதில்லை. அதனால் வெளிநாடுகளுக்கு தொழிலுக்காக செல்லுதல், புடவைக் கடை வைத்தல், வியாபாரம் செய்தல், மரக்றி வியாபாரம் செய்தல் போன்ற வேறு தொழில்களை நாடிச் செல்வதால், எங்களுடைய தொழில் மங்கிப் போகின்றது. அத்தோடு, இளைய தலைமுறையினர் படித்து, உத்தியோகம் செய்வதால் நாங்கள் தொழிலைத் தொடர்ந்து செய்வதற்கும் அவர்கள் விரும்புவதில்லை.

### கேள்வி: உங்களுக்கு வேறு தொழிலுக்குச் செல்வதற்கான எண்ணம் ஏதாவது உண்டா?

பதில்: இல்லை! இந்தத் தொழில் என்னுடைய பரம்பரையான தொழில். இன்றைக்கு வரைக்கும் எனக்கும் எனது குடும்பத்துக்கும் சோறு தருகின்றது. இதனை விட்டு நான் வேறு எந்தத் தொழிலையும் செய்ய மாட்டேன். நான் சாகும் வரைக்கும் இந்தத் தொழிலிலையே செய்வேன். .எனக்கு வயது போய்விட்டது. கண்பார்வையும் மங்கலாகிப் போய்விட்டது. இருந்தாலும், நான் இந்தத் தொழிலை என்னால் முடிந்தவரைக்கும் செய்து வருவேன்.

### கேள்வி: உங்களுடைய காலத்திற்குப்பின் தொழிலினுடைய நிலைத்திருப்பு பற்றி ஏதாவது கூற முடியுமா?

பதில்: இங்கே இருக்கின்ற தொழிலாளிகளில் வயதில் மூத்தவனாக உள்ளேன். எங்களுக்குப் பிறகு, இத்தொழிலை இளவயது மட்டங்கள் தொடர்ந்து செய்வார்கள் என்பது சந்தேகமாக உள்ளது. எங்களோடு என் தொழில் முடிவடைந்து போய்விடும் என நினைக்கின்றேன்.

பரம்பரைத் தொழிலாக மேற்கொள்ளப்பட்டு வந்த சலவைத் தொழிலான,து இன்றைய காலகட்டத்தில் தனது இறுதிக் கட்டத்தில் தள்ளாடிக் கொண்டு இருப்பதை அவதானிக்க முடிவதோடு, இத்தொழிலில் ஈடுபட்டு கொண்டிருக்கும் மூத்த தலைமுறையினரினுடைய காலத்தோடு முடிவுக்கு வருவதோடு, இனிவரும் காலங்களில் சலவைத் தொழில் என்றால் என்ன என்று இளைய தலைமுறையினர் கேள்வியை எழுப்பும் அளவுக்கு இத்தொழிலினுடைய அடையாளம் அருகிச் செல்வதை அவதானிக்க முடிகின்றது.

---

வரவேற்புவளையிக்கான அடிக்கல்நாட்டி மூன்று வருடங்கள்

# நிதி வீணாகும் நிலையில்..





வி.ரி. சகாதேவராஜா

காரைதீவு தென்புற எல்லையில் வரவேற்புவளையியை நிர்மாணிப்பதற்காக ஒதுக்கப்பட்ட நிதி 3 வருடகாலமாக பயன்படுத்தப்படாத காரணத்தினால் மீளத்திரும்பிப்போகும் ஆபத்தை எதிர்நோக்கியிருப்பதாக கூறப்படுகிறது.

இதற்காக மூன்றுவருடங்களுக்குமுன் அடிக்கல் நடப்பட்டது. ஆனால் இன்னும் ஒருசாண்கூட நகராமல் அப்படியே கிடப்பது குறித்து காரைதீவு பொதுமக்கள் விசனம் தெரிவித்துவருகின்றனர்.

தற்போது அம்பாறை மாவட்ட மேலதிக அரசஅதிபரான வே.ஜெகதீசன் காரைதீவு பிரதேச செயலாளராகவிருந்த 2018ஆம் ஆண்டு இதற்கான அடிக்கல் நடுவிழா கோலாகலமாக நடைபெற்றது.

காரைதீவு பிரதேச சபைத் தவிசாளர் கி.ஜெயசிறில் அதற்கான 85 இலட்ச ரூபாய் நிதியை முன்னாள் அமைச்சர் மனோகணேசனிடமிருந்து பெற்று பிரதேச செயலகத்திடம் கொடுத்திருந்தார்.
அமல்படுத்தும் பொறுப்பு வீதி அபிவிருத்திஅதிகார சபையின் நிருமாணத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

எனினும் நிருவாக நடவடிக்கைகள் காரணமாக தாமதமடைந்து வந்தது.சுமார் இரண்டு வருட காலமாக இக்கட்டுமானப்பணி இழுபட்டுவந்தது.

இந்த நிலையில் 2020 நவம்பர் மாதம் 16ஆம் திகதி இதன் கட்டுமானப்பணிளை மீள ஆரம்பிக்கும் முகமாக பிரதேச செயலாளர் தவிசாளர் மற்றும் வீதி அபிவிருத்திஅதிகார சபை உயரதிகாரிகள் கூடி களத்திற்குச்சென்று உரிய இடத்தை நிர்மாணத் திணைக்களத்திற்கு வழங்கியிருந்தனர். இருந்தபோதிலும் இன்றுவரை அப்பணி ஆரம்பமாகவில்லை. அடிக்கல் நடப்பட்ட இடம்கூட தெரியாத நிலையில் உள்ளது. இது தொடர்பாக அங்கு மக்கள் கருத்துரைக்கையில்:

“மூன்று வருடத்திற்கு முன்பு அடிக்கல் நடப்பட்ட போதிலும் இன்னும் வரவேற்புவளையியைக் காணாமல் கவலையடைகின்றோம். ஏனைய சில ஊர்களில் நினைத்த மாதிரி இத்தகைய வளையிகளைக்கட்டுகிறார்கள்.ஆனால், இங்குமட்டும் ஏகப்பட்ட தடைகள் நடைமுறைகள். இருந்தும் வருடமாக இழுபட்டு வருகிறது என்றால் வெட்கமாகவிருக்கிறது. இதற்குப் பொறுப்பான பிரதேச செயலாளர், தவிசாளர், வீதித்துறையினர் பதிலளிக்கவேண்டும்” என்றனர்.







### தவிசாளர் கி.ஜெயசிறில் கருத்துரைக்கையில்:

காரைதீவு தென்புல எல்லையில் வரவேற்பு வளையி அமைக்க வேண்டும் என்ற பொதுமக்களின் நீண்டநாள் ஆசையை நிறைவேற்றுமுகமாக நான் எனது சொந்தப்பணத்தைச்செலவழித்து கொழும்புசென்று முன்னாள் அமைச்சர் மனோகணேசனிடம் 85லட்சருபா பணம் பெற்று பிரதேசசெயலகத்திடம் பணியை ஒப்படைத்தேன்.

அதனிடையே துறைசார்ந்த ஊர்ப்பிரதிநிதிகளை அழைத்து எவ்வாறு இந்த வரவேற்புவளையி வரவேண்டும் என்ற ஆலோசனையையும் பெற்றிருந்தேன். அதன்படி முறைப்படி உரியவர்களிடம் அனுமதியும் அங்கீகாரமும் பெறப்பட்டன.

இதன்கட்டுமானப்பணியை கட்டடத்திணைக்கள த்திடம்ஒப்படைத்து வீதிஅபிவிருத்திஅதிகாரசபையின் நிருமாணப்பிரிவு முன்னெடுப்பதற்காக நடவடிக்கைகளை மேற்கொண்டதாக அறிந்தேன்.

ஆனால் இதுவரை ஒருஅடி கூட நகரவில்லை. 3வருடத்திற்கு என்னநடந்தது?.தமிழப்பிரதேசம் என்பதாலா இந்த இழுத்தடிப்பு? பொதுமக்களைப்போன்றே நானும் கவலையடைகிறேன். தாமதத்திற்குகாரணம் என்னவென்றுகூடத்தெரியவில்லை என்றார்.

### பிரதேச செயலாளர் சிவ. ஜெகராஜன் கருத்துரைக்கையில்:

பொதுமக்களின் கவலை நியாயமானதுதான். வீதிஅபிவிருத்திஅதிகாரசபையிடமிருந்து நிருமாணத்திணைக்களத்திற்கு உரிய வரவேற்புவளையியின் திட்டஅங்கீகாரம் கிடைக்கப்பெற்றிருந்த போதிலும் வடிவமைப்புக்கான அங்கீகாரம் கிடைக்கப்பெறவில்லையெனத் தெரிகிறது. அதன்காரணமாகவே இத்தாமதம் நிலவுகிறது என்றார்.

உரியதரப்பினர் இவ்வரவேற்பு வளையியை இனியாவது அமைக்க நடவடிக்கை எடுப்பார்களா? என பொதுமக்கள் கோரிக்கைவிடுக்கின்றனர்.





### கற்பிட்டியில் டொல்பின் வசந்தகாலம் ஆரம்பம்

# எங்கே நிம்மதி, எங்கே நிம்மதி?

## இங்கே அதற்கோர் இடமுண்டு!



ரஸீன் ரஸ்மின்



இலங்கையின் சுற்றுலாத்துறையில் புத்தளம் மாவட்டம், கற்பிட்டி பிரதேசம் முக்கியத்துவம் வகிக்கிறது. கற்பிட்டி பகுதியில் உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு எப்போதுமே பஞ்சமில்லை.

இயற்கையின் அதிசயங்கள் பல, கற்பிட்டி மண்ணிலும் கடலிலும் காணப்படுகின்றன என்ற உண்மையை, கற்பிட்டிக்கு வருகை தந்தவர்கள் யாரும் மறுக்க மாட்டார்கள். அவர்களது வாழ்நாள் முழுவதும் கற்பிட்டி பயணம் என்பது பசுமரத்தாணி போல் பதிந்துவிடுகின்றது.

கொழும்பிலிருந்து இருந்து 166 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்திருக்கும் கற்பிட்டி பிரதேசத்துக்குச் செல்வதற்கு, கொழும்பு - புத்தளம் பிரதான வீதியில் பாலாவி சந்தியில் இடதுபக்கமாகத் திரும்பி பயணிக்க வேண்டும்.

கற்பிட்டிக்குச் செல்லும் வழியில்த்தான், பிரசித்திபெற்ற தலவில புனித அன்னமாள் திருத்தலமும் இருக்கின்றது. நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையமும் இங்குதான் அமைந்துள்ளது. இவ்வாறு கற்பிட்டி பகுதி மாத்திரமல்ல அதன் அயல் பிரதேசங்களும் வரலாற்று ரீதியாகப் பெறுமதிமிக்க, சுற்றுலா வலயமாகக் காணப்படுகின்றது.

டொல்பின் மீன்கள், பட்டம் விடும் விளையாட்டுத் திடல், பவளக்கற் பாறைகள் எனப் பல அதிசயங்களை சுமந்து கொண்டு, இலங்கையின் சுற்றுலாத் தளங்களில் கற்பிட்டி பிரதேசமும் மிகவும் முக்கிய தளங்களில் ஒன்றாக விளங்குகின்றது.

இந்நிலையில், கற்பிட்டியில் தற்போது டொல்பின் வசந்தகாலம் ஆரம்பமாகியுள்ளது. சீரற்ற வானிலை காரணமாக ஒரு மாதம் தாமதமாகியே டொல்பின் மீன்களைப் பார்வையிடும் வசந்தகாலம் ஆரம்பமாகியதாக கற்பிட்டி மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால், குறித்த டொல்பின் மீன்களைப் பார்வையிடுவதற்காக உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் புத்தளம், கற்பிட்டி நகரை நோக்கி படையெடுக்க ஆரம்பித்துள்ளனர்.

கற்பிட்டி நகரிலிருந்து ஆறு கிலோ மீற்றர் தொலைவில்தான், இந்த டொல்பின்களின் சாகசங்களை காணக்கூடியதாக இருக்கும்.

இயந்திரப் படகு ஒன்றின் மூலம் மாலுமி மற்றும் உதவியாளர் உட்பட ஆறு பேர் மட்டுமே அந்தப் படகில் பயணிக்க முடியும். தனித்தனி நபராகவோ, குடும்பம் சகிதமாகவும் குறித்த இயந்திரப் படகை வாடகைக்கு அமர்த்திக் கொள்ள முடியும். இந்த இயந்திரப் படகு ஒன்றுக்கு 10 ஆயிரம் முதல் 12 ஆயிரம் ரூபாய் வரையில் கட்டணம் அறவிடப்படுகிறது.

கற்பிட்டி நகரின் கடற்கரையிலிருந்து சுமார் 30 நிமிடங்கள் வரை பயணம் செய்த பின்னர், மூன்று மணித்தியாலங்கள் அளவில் கடலில் தரித்துநின்று டொல்பின்களைப் பார்வையிடுவதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது. அத்துடன், டொல்பின்களின் ரம்மியமான சாகசங்களை, 50 மீற்றர் தூரத்தில் இருந்து பார்வையிடக் கூடியதாக இருக்கும்.

இப்பயணத்தின் போது, பாதுகாப்பு கவச ஆடைகள் கட்டாயமாக அணிய வேண்டும் என்பதுடன், குறித்த பாதுகாப்பு ஆடைகள் அனைத்தும் ஒவ்வொரு பயணத்துக்கு முன்னரும் பின்னரும் கட்டாயமாகக் கிருமி நீக்கம் செய்யப்படுவதாகவும் சுற்றுலாப் பயணிகளை அழைத்துச் செல்லும் மாலுமிகள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன், டொல்பின்களை பார்வையிடுவதற்காக பயணிப்போர், அவற்றின் இயற்கையான செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில், அவற்றைப் பார்வையிட வேண்டும் எனவும், வனஜீவராசிகள் திணைக்களத்தின் கற்பிட்டி அலுவலக அதிகாரிகள் தொடர்ச்சியாக அறிவுறுத்தல்களை வழங்கி வருகின்றனர்.

> கற்பிட்டி கடற்கரையில் இருந்து 30 நிமிடம் பயணம் செய்த பின்னர், மூன்று மணித்தியாலம் கடலில் தரித்துநின்று 50 மீற்றர் தொலைவில் டொல்பின்களைப் பார்ப்பதற்குச் சந்தர்ப்பம்

டொல்பின்கள் நீருக்கு மேல் வந்து, பாய்ந்து பாய்ந்து விளையாட்டுகளில் ஈடுபடுவதைத் தனியாகவோ, நண்பர்கள் சகிதமோ, குடும்பத்துடனோ சென்று பார்க்கும் போது, ஒருவித மனநிம்மதியைக் கொடுப்பதற்காக, டொல்பின்களின் சாகசத்தை கண்டுகழித்த உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள், தங்களது அனுபவங்களைச் சந்தோச உணர்வுடன் வெளிப்படுத்துகின்றனர். அத்துடன், கடலுக்கு நடுவில் சென்று டொல்பின்ளைப் பார்வையிடுவது, ஒருவித வித்தியாசமான உணர்வை ஏற்படுத்துவதாகவும் சுற்றுலாப் பயணிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

கற்பிட்டி கடலோர நகரமாகவும் வர்த்தக நகரமாகவும் தலைநிமிர்ந்து நிற்கின்றது. புத்தளம் மாவட்டத்தில் சிலாபம், குருநாகல் உள்ளிட்ட நகரங்கள் பெற்றுக்கொள்ளாத பல முக்கியத்துவம், நவீன வரலாற்றில் கற்பிட்டி நகரம் பெறக்கூடியதாக இருப்பது சிறப்பம்சமாகும்.



### யுத்தத்தின் பின்னர்

# வறுமைக்கோட்டுக்கு கீழ் வந்திருக்கும் கிராமம்



வ. சக்திவேல்
shagthivel@gmail.com






மட்டக்களப்பு மாவாட்டத்தின் ஏறாவூர் பற்றுப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்டு, செங்கலடி - பதுளை வீதியில் அமைந்துள்ள ஒரு பழம்பெரும் தமிழ் கிராமம் பன்குடாவெளியாகும். இங்குள்ள மக்கள் விவசாயம், மீன்பிடி, கூலிவேலை உள்ளிட்ட பல தொழில்களைத் தமது பிரதான ஜீவனோபாத் தொழில்களாக மேற்கொண்டு வருகின்றனர். ஆனாலும், இக்கிராமத்தில் முறையான வீதிக் கட்டமைப்புகள், தொழில்வாய்ப்பின்மை உள்ளிட்ட பல காரணங்களால் இங்குள்ள மக்கள் மிகுந்த இன்னல்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கின்றனர்.

இதே போன்ற பல கிராமங்கள் மெல்ல மெல்ல வளர்ச்சிப் பாதையில் முன்னேறிக் கொண்டிருக்கும் இன்றைய காலகட்டத்தில், அதற்கு உந்துசக்தியளிக்கும் வகையில் அரசாங்கமும், ஒத்தாசை வழங்கும் அரச சார்பற்ற அமைப்புகளும் செயற்பட்டுவரும் நிலையில், பன்குடாவெளி கிராமத்தில் காணப்படும் குறைகளைக் குறைக்கவும், நிறைகளை நிரந்தரமாக்கவும், திட்ட வரைபுகளைத் தீட்டவேண்டும் என்பதே இக்கிராம மக்களின் வேண்டுகோளும் எதிர்பார்ப்புமாகும்.

“எமது கிராமம், 30 வருட கால யுத்தத்தின் பிற்பாடுதான் வறுமைக்கோட்டுக்கு வந்திருக்கும் கிராமமாகும். இங்குள்ள மக்களின் தொழில்கள் அனைத்தும் இழக்கப்பட்டதனால்தான் இவ்வாறு வறுமை வந்துள்ளது. அதற்காகவேண்டி, ஏ5 வீதியை அண்டியதாக ஒரிரு தொழிற்சாலைகளை அமைத்து, அதனூடாகத் தொழில்வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதனூடாக, இங்குள்ள மக்களின் வறுமையைப் போக்க முடியும் என நினைக்கின்றேன். மாறாக, அரசாங்கமும் அரச சார்பற்ற அமைப்புகளும் அவ்வப்போது , உணவுப் பொட்டலங்களை வழங்கி விட்டுச் செல்வதால், எமது கிராமம் இதுவரையில் எதுவித பயனையும் அடையவில்லை.

நாங்கள் எதிர்பார்ப்பதெல்லாம், ஒரு தொழிற்போட்டையைத்தான். அதற்கு யாராவது முன்வந்து செயற்படுவார்களேயானால் அவர்களுக்கு எமது கிராமம் மாத்திரமின்றி எமது பிரதேச மக்களே மிகுந்த நன்றியுடையவர்களாக இருப்பார்கள். அரசாங்கத் தரப்பிலிருந்து இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெற்றது இல்லை. ஆனாலும், புலம் பெயர் தமிழ் மக்கள் அல்லது புலம்பெயர்ந்து செயற்படும் பொது அமைப்புகள் உள்ளிட்டவர்கள் ஒருமித்து, எமது பிரதேச மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு, ஒரு தொழிற்போட்டை அமைத்து, அதனூடாக இப்பகுதியிலுள்ள படித்த இளைஞர் யுவதிகளுக்குத் தொழில் வாய்ப்புகளை வழங்கி, அவர்களின் வாழ்வாதார மேம்பாடுகளுக்கு உதவ முன்வர வேண்டும் என்பதைத் தெரிவிக்கின்றேன்” என்றார் ஓய்வு பெற்ற ஆசிரியரும் சன சமூக நிலையத்தின் தலைவருமான வல்லிபுரம் அல்பேட்.

ஏர்முனை மாற்றுத்திறனாளிகள் அமைப்பின் ஆலோசகரும் மாற்றுத்திறனாளியுமான துரைசாமி அரிதாஸ் கூறும்போது, “எங்களது கிராமசேவகர் பிரிவில் புலையவெளி, தளவாய், நெல்லுப்போடியார்கல், சின்னக்கொலனி, பெரியகொலனி ஆகிய சிறிய குக்கிராமங்கள் காணப்படுகின்றன. இந்தக் கிராமங்களை ஒன்றிணைத்துத்தான் பன்குடாவெளி கிராமம் திகழ்கின்றது. இங்கு சுமார் 450 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்றன. இதில் புலையவெளி பகுதியில் மாத்திரம்தான் குழாய் நீர் இணைப்பு உள்ளது. ஏனைய நான்கு பகுதிகளுக்கும் இன்னும் குழாய் மூலமான குடிநீர் எட்டாக்கனியாகவே உள்ளது. எமது கிராமத்தில் ஆங்காங்கே சிறிய அளவில் வீதி புனரமைப்புகளும் வீடு, மலசலகூட வசதிகள் வழங்கப்பட்டிருந்தாலும் அது இன்னும் போதாதுள்ளது” எனத் தெரிவித்தார்.

கடந்த யுத்த காலத்தில், களுவங்கேணி உள்ளிட்ட பல இடங்களைச் சேர்ந்த மக்கள், இக்கிராமத்தில் குடியேறியிருந்தார்கள். அவர்களில் பலர், நோய்வாய்ப்பட்டும் கணவனை இழந்தும் காணவன்மார் காணாமலாக்கப்பட நிலையிலும், மலசலகூடம், குடியிருக்க முறையான வீட்டு வசதிகள் இல்லாமல், பல பெண்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்று, அங்கும் தகுந்த தொழிலின்றியும் பல உபாதைகளுக்கு உட்பட்டும், மீண்டும் சொந்தக் கிராமத்துக்குத் திரும்பி வந்து வாழ்கின்றார்கள்.

இவர்கள், பல இன்னல்களுக்கு மத்தியில் வாழ்கின்றார்கள். குழந்தைகளுடன் மழைக்கும் வெயிலுக்கும் தாக்குப்பிடிப்பதற்காக அயல் வீடுகளுக்குச் சென்று, இரவுப் பொழுதைக் கழிக்கும் நிலைமை தொடர்கதையாக உள்ளதாகவும், தமது குடும்பச் சுமையைத் தாங்குவதங்காக பெண்களும், வயலிலும் ஏனைய வேலைகளிலும் ஈடுபட்டு தமது குடும்பங்களைப் பேணி வருவதாகவும் பன்குடாவெளி கிராம மக்கள் கவலை வெளியிடுகின்றனர்.

நாட்டில் காலத்துக்குக் காலம் அரசாங்கங்கள் மாற்றம் பெறும்போதல்லாம் கிராமங்கள் தோறும் அபிவிருத்திப் புரட்சி ஏற்படும்; தொழில் பேட்டைகளை அமைத்து வறுமை குறைக்கப்படும் போன்ற மக்கள் மனதைக் கவரும் வாசகங்களை முன்வைக்கின்ற போதெல்லாம் அந்த வார்த்தைகளுக்குக் கட்டுப்பட்டவர்களாக மக்கள் தமது வாக்குரிமை மூலம் தங்களுடைய பிரதிநிதிகளைத் தேர்வு செய்கின்ற போதிலும் அவர்களூடாகக் கிடைக்கின்ற மக்களுக்கான சேவை போதாத நிலைமையே காணப்படுவதாக மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

“பன்குடாவெளி கிராமத்திலுள்ள மக்களின் வாழ்வாதாரத்துக்கு உதவுவதற்கு நாம் முயற்சிக்கின்றோம். அதனைவிடுத்து, அங்கு பழுதடைந்து கிடைக்கின்ற வீதிகள், மலசலகூடம் இல்லாதவர்களுக்கும் வீடுகள் இல்லாதவர்களுக்கும் அதைப் பெற்றுக் கொடுப்பதற்கு, நாம் ஏற்கெனவே திட்டங்களை வகுத்துள்ளோம். ஒட்டு மொத்தத்தில், மட்டக்களப்பு மாவட்ட தமிழ் மக்களின் நாடித்துடிப்பை நன்கறிந்துள்ளோம்; மாவட்டத்துக்குப் பல மில்லியன் கணக்கான நிதிவளத்தைக் கொண்டுவந்து கொண்டிருக்கின்றோம். அதன்மூலம், வீதிக் கட்டமைப்புகள், வடிகான் அமைப்பு வசதிகள், வீடமைப்பு, மலசலகூடம், வாழ்வாதார உதவித் திட்டங்களையும் மேற்கொண்டு வருகின்றோம். மக்களும் எமக்கு ஒத்துழைப்புக்களை வழங்கினால் எம்மால் மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்களை மேலும் விஸ்தரிக்க முடியும் என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் பரமசிவம் சந்திரகுமார் தெரிவித்தார்.

கிராம மக்கள் மத்தியில் காணப்படும் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு வழங்கப்படும் பட்சத்திலேயேதான், அந்த மக்கள் மத்தியில் அடிப்படைக் கட்டுமானத்திலும் வாழ்வாதாரத்திலும் முன்னேற்றகரமான வாழ்வைக் காணமுடியும். இல்லையேல், மக்கள் பிரதிநிதிகளினதும் ஏனைய அதிகாரிகளினதும் வாக்குறுதிகளுக்கு மாத்திரம் செவிசாய்த்தவர்களாக, மக்கள் தொடர்ந்து தமது வாழ்வை ஏமாற்றப்பட்டவர்களாகவே வாழவேண்டிய நிலைமை அமையும் என்பதில் எதுவித ஐயமும் இல்லை.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் சனிக்கிழமை, 11 டிசெம்பர் 2021, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.